Registered as a Newspaper    பக்கம் 06    விலை ரூபா 5-00

நல்லூர் ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    மாசி 24    (8.03.94)    செவ்வாய்க்கிழமை    ஓசை 18

## பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தைமாத நிவாரணம் வழங்கப்படும்

சிறிலங்கா அரசாங்கத்தின் கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான தைமாத உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது. இந் நிவாரண விநியோகத்திற்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களை புனர்வாழ்வுப் பகுதியினர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் மாசி மாதத்திற்கான உலர் உணவு விநியோகம் பற்றி இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

(பா) (தி)

# சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்க விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர்

## மகளிர் தினச் செய்தியில் தலைவர் பிரபாகரன்

[யாழ்ப்பாணம்]

"சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்கு வரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறோம். எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்ஞைகளைக் காட்டவும் நாம் தவறவில்லை". இவ்வாறு அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அவ்வறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:

அனைத்துலக மகளிர் தினமாகிய இன்று, உலகப் பெண்ணினத்துடன் கை கோர்த்து நின்று, நாமும் எமது தாயக மண்ணில், இந்த எழுச்சி நாளைக் கொண்டாடுகிறோம்.

பெண் அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு நாடும், எந்த ஒரு சமூகமும், முழுமையான சமூக விடுதலையை பெற்றதாகக் கூறமுடியாது. ஏனென்றால், பெண் விடுதலையே சமூக விடுதலையை முழுமை பெறச் செய்கிறது. பெண்கள் சுதந்திரமாக, கௌரவமாக, சமத்துவமாக வாழ வழிசெய்யும் ஒரு மக்கள் சமூகமே உண்மையில் விடுதலை பெற்ற சமூகமாக இருக்க முடியும். அந்த சமூகமே உயரிய பண்பாட்டின் உன்னத நிலையை அடைய முடியும்.

## பெண்ணினத்தின் விடுதலையே

## கலிபர் தாக்குதல்

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கிளாலி, அல்லிப்பளை கடல் கரையோரப் பகுதிகள் நோக்கி கலிபர் தாக்குதலை நடத்தியது.

கடலில் மீன் பிடிப்பதற்காக வலை வீசியிருந்த மீனவர்கள் மீதே இத் தாக்குதல் ...

## குரல்வளைகள் சிதையுமுன் ஓங்கிக் குரல் கொடுப்போம்

(யாழ்ப்பாணம்)

''ஒளி மங்கிக்கொண்டிருக்கும் எம் பெண்களின் விழிகளுக்கு ஒளி மீண்டும் பரவ வழி செய்யவேண்டும். அதற்கு அனைத்துத் தமிழீழப் பெண்களும் ஒன்று இணைந்து சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராகக் குரல் கொடுப்போம். குரல்வளை முற்று முழுவதுமாக நசுக்கப்படும் முன் ஓங்கிய குரலில் எம் வாழ்வுக்கு வழி கிடைத்தே ஆகவேண்டும் என முழக்கமிடுவோம்'' இவ்வாறு அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

தமிழீழ மக்கள் நடாத்துவது நியாயமான உரிமைப் போராட்டம். அநீதிக்கு எதிரான சத்தியப் போர். ஆனால் எமது 'தேசியப் பிரச்சினையை' 'பயங்கரவாதம்' என்று சொல்லிப் பல குத்துக்கரணங்களைப் போடுகிறது சிங்கள இனவாத அரசு. தனது கையாலாகாத்தனத்தை தமிழ் மக்கள் மீது நடாத்தும் பழிவாங்கல் நடவடிக்கையால் மூடி மறைக்கிறது.

பேரினவாதத்தை தன் தாரக மந்திரமாக முழங்கிக் கொண்டிருக்கின்றது சிங்கள அரசு. இந்த 'வாதத்தின்' விளைவுகள்தான் எம் தேசத்தின் மூலை முடுக்கு எங்கும் ஒலிக்கும் வேதனை முனகல்கள், சிதறுண்டு போன உடலங்கள், பாய்ந்தோடும் குருதி வெள்ளம், உடலும் உளமும் உருக்குலைந்து உலா வரும் மக்கள்.

இந்த அரசின் ஈவிரக்கமற்ற கொன்றொழிப்பு நடவடிக்கைகளால் தமிழீழப் பெண்கள் அனுபவிக்கும் துயரங்கள் சொல்லும் தரமன்று. எழுபதைந்து வீதத்துக்கும் மேலான குடும்பப் பொறுப்பைச் சுமப்பவர்கள் எம் பெண்களே. அதனால் அரசின் நடவடிக்கையின் நேரடிக் கதிர் வீச்சுக்கு ஆளாகு

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று அனைத்துலக மகளிர் நாள்

# பெண்ணினத்தின் விடுதலையே சமூக விடுதலையை நிறைவுசெய்யும்

எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல; தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக் கொண்டே நாம் போராடி வருகிறோம். சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது; சகல ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும். அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்தமுடையதாக முழுமை பெறமுடியும், என்பது எமது நிலைப்பாடு;

ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற ரீதியில் எமது தேசத்தின் நலன் கருதி, எமது மக்களின் நல்வாழ்வு கருதி, நாம் முற்போக்கான கொள்கைகளை வரித்து, போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். இந்தக்கொள்கைகளை மக்கள் பற்றிக்கொண்டு, அவற்றைச் செயற்படுத்த உறுதிபூண்டு, போராட்டத்தில் பங்குகொள்ளும்பொழுதுதான் போராட்டம் வெற்றிப்பாதையில் செல்லமுடியும். எந்தஒரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்குப்புறம்பாக நின்று, விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. அது நடைமுறைச் சாத்தியமான காரியமுமல்ல, ஒரு விடுதலை இயக்கத்துக்குப்பின்னால் மக்கள் அணிதிரண்டு, அந்த இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுக்கொண்டு போராட்டத்தில் பங்கும்கொள்ளும்பொழுதுதான்விடுதலை சாத்தியமாகிறது.

# சமூக நீதியை நிலை நிறுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளோம்

எமது சமூகத்தில் நிலவும் ஒடுக்குமுறை வடிவங்களை ஒழித்துக்கட்டி, சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநிறுத்த எமது இயக்கம் திட சங்கற்பம் பூண்டிருக்கிறது; சமூக உறவுகளில் அடிப்படையான மாற்றத்தை நிகழ்த்துவதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும். இந்தச் சமூக மாற்றத்திற்கு முதற்படியாக சமூக விழிப்புணர்வு அவசியம். விழிப்புணர்வு பெற்ற மக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம். மக்களின் ஆதரவுடன், மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை; நீண்ட நெடுங்காலமாக, எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப் புரையோடி நிற்கும் சமூகக் கொடுமை; இந்த சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாகச் சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து இந்த புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்;

# தம் விடுதலைக்கான போராட்டத்தை பெண்கள் தீவிரப்படுத்த வேண்டும்

தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புற்று நிற்பதால், எமது சமூகத்தில் ஒரு புரட்சிகரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது: சமூக மாற்றத்திற்கு ஏதுவான புறநிலை தோன்றியிருக்கிறது. இந்தப் புரட்சிகரமான வரலாற்றுச் சூழ்நிலையைப் பயன்படுத்தப் பெண்ணினம் தவறிவிடக் கூடாது; சமூகப் புரட்சிக்கான அக, புறச் சூழ்நிலைகள் கனிந்துள்ள இவ்வேளையில், பெண் விடுதலைக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்த பெண்கள் முன்வர வேண்டும்.

ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும். அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வரவேண்டும். இந்த வகையில்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

நோக்கி கலிபா தாக்குதலை நடத்தியது.

கடலில் மீன் பிடிப்பதற்காக வலை வீசியிருந்த மீனவர்கள் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிய வருகிறது. (86)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## கத்தோலிக்க திருச்சபை மேய்ப்புப்பணி மாநாடு

(குருநகர்)

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மாநாடு இன்று மாலை 3.30மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமாகிறது;

நாளைக் காலையில் இருந்து மாநாட்டின் முக்கிய அமர்வுகள் புனித - பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் மரியன்னை பேராலயத்தில் இடம் பெறும் திருப்பலியில் முன்னாள் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை மற்றும் மன்னார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று சகல அவசர அனுமதி வழங்கும் செயலகங்களும், அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களும், அலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்பப்பதிவு அட்டைச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும் மூடப்பட்டிருக்கும் என்பதைப் பொதுமக்களுக்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்;

# இன்று அனைத்துலக மகளிர் நாள் வடபகுதி எங்கும் எழுச்சிக்கோலம்

(யாழ்ப்பாணம்)

இன்று அனைத்துலக மகளிர் நாள். இன்றைய மகளிர் நாள் தமிழீழத்திலும் எழுச்சி பூர்வமாக கொண்டாடப்படவுள்ளது. அனைத்துலக மகளிர் நாள் நிகழ்வுகளுக்கான சகல ஏற்பாடுகளும் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளன;

அனைத்துலக மகளிர் நாளை தமிழீழத்தில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்காக கடந்த இரு வாரங்களுக்கு முன்னரே ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தமிழீழத்தில் குறிப்பாக வடபகுதியில் இவ்வாறான எழுச்சியூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

பிரதான வீதிகள்தோறும் மகளிர் தினத்தை மக்களுக்கு அறிவிக்கும் வகையிலும், எழுச்சியூட்டும் வகையிலும் அமைந்த வர்ணப் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் மாணவன் பிரகாஷ் யப்பான் பயணம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில்ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்190புள்ளிகளைப் பெற்ற கணேஸ் வரன் பிரகாஷ் யப்பானிற்கான சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ள யப்பானிய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கானசெலவு யப்பானிய அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ளது;

எனவே மேற்படிமாணவன் முழு இலங்கையிலும் தமிழ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கடற் படையினர் தாக்குதல் மூன்று மீனவர் பலி; 4 பேர் காயம்

## வடமராட்சிப் பகுதியில் கொடூரம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட வெறியாட்டத்திற்கு மூன்று பேர் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

வெற்றிலைக்கேணிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை 6 மணிமுதல் 7மணிவரையில் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலில் மூவர் பலியாகவும் நால்வர் படுகாயமடையவும் நேரிட்டது.

இக் கடற்பரப்பில் ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படையினர் நாகர்கோயில் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது மேற்கொண்ட அகோரத் தாக்குதலின்போது மூவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிமீதான தாக்குதல் 15இல் ஆரம்பமாகுமாம்

### இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு நோக்கிய இராணுவ நடவடிக்கைகள் எதிர்வரும் 15ஆம், 17ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படும் என சிறிலங்காவின் பாதுகாப்பு உயரதிகாரியை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன;

கிழக்கில் உள்ள படையினரைப் பயன்படுத்தி இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் எனவும் இத் தினங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முழுமையானவையாக இருக்குமெனவும் அவ் அதிகாரி கூறியுள்ளார்;

# வரி விளம்பரம்

## விரைவில் பாலராசிரியராக!

தகைமை ஜி. ஸி. ஈ (O L) சனி ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிற்சி பெறலாம்; பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். (7670)

## மின்னொளியில் சைனீஸ் உணவு - சூப்

வைபவங்களுக்கான விசேட உணவுவகை- சூப்வகை, உங்கள் இல்லம் வரையிலான பரிமாறு சேவைக்கும் நாடுங்கள் காருண்யா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7662)

## தண்ணீர் தாங்கி விற்பனைக்கு

8 X 4 X 4 அடி கன சதுர தண்ணீர்த்தாங்கி விற்பனைக்குண்டு "மில்க்வைற்" (இ-8793)

## விற்பனைக்கு

அல்சேஷன் நாய், கறுப்பு நிறம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- விஜி 125 ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (7683)

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் நடாத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். பெண்கள் குறித்த பல சிறப்புரைகளை அறிஞர்கள் வழங்குவர். மாலை நிகழ்ச்சி 2 மணிக்கு ஆரம்பமாகும். இதில் நடனம், பாடல், கவியரங்கம், சமகாலத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளதா என்ற தலைப்பில் பட்டிமன்றம், வில்லிசை, நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெறும்.

* *

சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினர் நடத்திய இலக்கிய ஓவியப்போட்டியில் வெற்றி பெற்றோருக்

# அனைத்துலக பெண்கள் திருநாளை முன்னிட்டு!

## ஈழம் காக்கும் எங்கள் பெண்கள்!

எங்கள் பெண்களில் இன்றடா – தமிழா
எழுச்சி பொங்குது பாரடா
திங்கள் நெற்றியை பாரடா . வீர
திலகம் தெரியுது பாரடா
அகப்பை பிடித்த கரங்களில் – தமிழா
ஆயுதம் தெரியுது பாரடா
எதிரி பகையை ஒழித்தே பெண்கள்
ஈழம் காப்பதை பாரடா

உலகம் வியக்கும் பெண்களாய் – தமிழீழத்தில்
உரிமை காக்க எழுந்தனர்
கலகம் யாவும் ஒழித்திட
களத்தில் பெண்கள் குதித்தனர்
அடிமை விலங்கை ஒழித்திட
ஆயுதம் ஏந்தி நின்றனர்
சம உரிமை பெற்றிட பெண்கள்
சரித்திரம் படைத்து நிற்கின்றார்

தங்கத் தலைவரின் தமிழீழ வரலாற்றில்
தமிழீழப் பெண்களின் எழுச்சி பொங்குது
மங்காப் புகழ்படைத்த மாவீரர் மாண்போடு
எங்கள் திருநாட்டில் பெண்கள் திருநாள்
எழுச்சியாய் மலருது
எங்கள் பெண்கள் இன்றடா தமிழா
எழுச்சி கொண்டனர் பாரடா

தங்கத் தலைவரின் தமிழீழ வரலாற்றில்
எங்கள் பெண்களின் எழுச்சி பொங்குது
மங்காப் புகழ் படைக்கும் மாவீரர் மாண்போடு
மகளிர் திருநாள் மண்ணில் மாண்போடு
மலர்கிறது

உரிமை காக்கும் ஈழப் பெண்கள்
உரிமை காக்க எழுந்தனர்
எங்கள் பெண்கள் ஈழம் காப்பதை பாரடா!

யாழ்ப்பாண வர்த்தகர்கள் சங்கம்
(7680)

# பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக; உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிவரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு! இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகிறேன் என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமலென்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன் நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்-

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்து 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள்

## பயிற்சி நெறி

(தொல்புரம்)

யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தினால் விசேட முதலுதவிப் பயிற்சியும், நோயாளர் பராமரிப்பு பற்றிய பயிற்சி நெறியும் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள அனைவரும் தமது விண்ணப்பங்களை இ. மகேந்திரன், மாவட்ட ஆணையாளர் கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில் எனும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கலாம் எனவும், பயிற்சி நெறிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## சிறுதானிய செய்கை

(தொல்புரம்)

வலிமேற்குப் பகுதிகளின் பெரும்பாலான நெல்வயல்களில் நெல் அறுவடை வேலைகள் பூர்த்தியாகியுள்ள தால் சிறுதானியப் பயிர்கள் உற்பத்தி ஆரம்பமாகியுள்ளன. சிறுதானியப் பயிர்களான எள்ளு, உழுந்து, கௌபீ, பயறு போன்றவற்றை உற்பத்தி செய்வதில் அதிக அக்கறையுடன் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். (41)

## இல்ல விளையாட்டு

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை இல்ல விளையாட்டு போட்டி இன்று செவ்வாய் பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி பு. கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

## நோயாளர் பராமரிப்பு பயிற்சி நெறி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட சாரணர் சங்கம் விசேட முதலுதவிப்பயிற்சியும், நோயாளர் பராமரிப்பு பயிற்சி நெறியையும் விரைவில் நடத்தவுள்ளது.

இலவசமாக இடம் பெறும் இப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் யாவரும் தத்தமது விண்ணப்பங்களைத் திரு. இ. மகேந்திரன், மாவட்ட ஆணையாளர், அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கூறியுள்

# மெய்வல்லுநர் போட்டியில் ஜோண் இல்லம் முதலிடம்

யாழ். சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி 5-3-94 சனிக்கிழமை யாழ். சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் அ. ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ் நல்லூர் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன், விசேட விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா, சிறப்பு விருந்தினர்களாக, புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளார், வலிகாமம் கிழக்கு கடற்புலிகள் பொறுப்பாளர் வா. பூவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்த மாணவர் தலைவன் ஆங்கிலத்தில் உரையாற்றியதுடன் அதிபர் தமது ஆரம்ப உரையில் ஆங்கிலத்திலேயே ஆரம்பித்து இரண்டாவது மொழியாக தமிழைப் பயன்படுத்தினார்,

இப்போட்டியில் ஜோண் இல்லம் முதலாவது இடத்தை தட்டிச் சென்றது.

இந்நிகழ்ச்சியில் பிரதம உரை ஆற்றிய யாழ். நல்லூர் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன், குருநகர் மண், விளையாட்டு, கலை, ஆன்மீகத் துறையில் புனிதமான இடம் இம்மக்களின் விளையாட்டுத் திறனை நான் நன்கு அறிவேன். இவர்களிடம் மிகத் திறமையான ஆளுமை உண்டு இதனை அபிவிருத்தி செய்ய வேண்டும். வகுப்பறைக் கல்வியோடு விளையாட்டையும் பயன்படுத்தினால் சமூகத்தில் உயர முடியும். கிராம மட்டத்தில் வசதி குறைந்த பாடசாலைகளுக்கு உதவி புரிகிறோம், சமூகத்தோடு பொருந்தி வாழக் கூடியவர்களாக மாணவர்களை ஆக்க வேண்டும் என்றார்.

வெற்றி பெற்றோர்க்கான பரிசில்களை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா, யாழ். நல்லூர் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் ஆகியோர் வழங்கினார்கள்.

# மேலதிக பாடநூல் விபரம் திணைக்களம் கோருகிறது

(நல்லூர்)

கல்விக் கோட்டங்களில் மேலதிகமாக உள்ள இலவச பாடநூல்கள் தொடர்பான விபரங்களை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல கல்விக் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களை யாழ் கல்வித்திணைக்களம் கோரி கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

மேலதிகமாகஉள்ள பாடநூல்களை பற்றாக்குறையாக உள்ளகல்விக் கோட்டங்களுக்கும், பனைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கும் இவை தேவையாக உள்ளதாகவும் யாழ் கல்வித்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (17)

## விவசாயிகள் ஒய்வூதியம்

(தொல்புரம்)

சொந்தக்காணி இல்லாத விவசாய கூலித் தொழிலாளர்களும், விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும் எனத் தெரியவருகிறது.

மேற்படி ஒய்வூதியத் திட்டத்தில் விவசாயிகளும், சொந்தக்காணி இல்லாமல் குத்தகைக்கு காணி செய்பவர்களும், விவசாயக் கூலி வேலை செய்பவர்களும் 18 வயது முதல் 50 வயதுக்கு இடைப்பட சேர்ந்து கொள்ளலாம் என தொல்புரம் கம

# 2 வார நிவாரணபொருட்கள் சங்கங்களுக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான மாசி மாதத்திற்குரிய முதல் இரண்டு கிழமைகளுக்குமான இலவச உணவுப் பொருட்கள் சகல பநோ. கூ. சங்கங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுவிட்டதாக யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

எனவே இடம் பெயர்ந்தவர்களுக்கு பலநோ. கூ. சங்கங்கள் மிகவிரைவில் மேற்படி நிவாரணப் பொருட்களை விநியோகிக்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை அரிசி, சீனி, மா தேயிலை, கைலன்ட் பால்மா ஆகிய பொருட்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

## குளிக்கச் சென்று மரணம்

(தொல்புரம்)

கிணற்றில் குளிக்கச் சென்ற ஒருவர் உயிரிழந்த நிலையில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 5-30 மணியளவில் நடந்த இத்துக்ககரமான சம்பவத்தில் மூளாய் குமரம்புலத்தைச் சேர்ந்த கனகரத்தினம் அரிச்சந்திரன் (வயது 29) என்பவரே மரணமானவர் ஆவார். குளிப்பதற்காக தனது வீட்டு வளவிலுள்ள கிணற்றில் தண்ணீர் அள்ள எத்தனிக்கையில் தவறிக் கிணற்றினுள் வீழ்ந்ததினால் மூச்சுத்திணறி அகால மரணத்தைத் தழுவிக்கொண்டார் என தெரியவருகிறது. (41)

## கண்காட்சி

(குருநகர்)

யாழ் மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தால் நேற்று காலை யாழ் பழைய பூங்கா வீதியில் கேக் ஐசிங், சிகையலங்காரம், பூவேலை விஞ்ஞானமுறையிலான தையல் ஆகியவற்றுக்கான இலவச வகுப்புக்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

நிலையத்தை 'கியூடெக்' இயக்குநர் வண. ஹில்லறி எஸ். ஜெபநேசன் அடிகள் திறந்து வைத்தார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. நடராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (21)

# நினைவு கூருகின்றோம்...

## 1994.03.08

1986ஆம் ஆண்டு இதே தினத்திற் யாழ் - அச்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினர் நடத்திய இலக்கிய ஒவியப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு இணுவில் கலைஞர் மண்டபத்தில் நடைபெறும். தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவன பொறுப்பாளர் இளவதனி தலைமையில் நடைபெறும். இப்பரிசளிப்பு விழாவில் விடுதலைப்புலிகள் மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா பரிசில்களை வழங்குவார். பொய்க்கால் கலை நிகழ்வும் இடம் பெறும்.

* *

மகளிர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் பகுதிகளில் கருத்தரங்குகள் பல இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொதுக்கூட்டங்களும் இன்று சில இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மகளிர் தினம் தொடர்பான பதாதைகளும் கொடிகளும் வீதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. தென்மராட்சியில் வீதி நாடகங்களும் நடைபெற்று வருகின்றன. (86,யோ)

## கண்டெடுப்பு

கந்தன் பழனியாண்டி என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## மகா சிவராத்திரி

(குருநகர்)

யாழ் - மடம் வீதி, திருவள்ளுவர் சனசமூக நிலையத்தால் வழமை போன்று இம்முறையும் 10 - ம் திகதி வியாழக்கிழமை இரவு மகா சிவராத்திரி விழா சிறப்பாக நடாத்தப்பட இருக்கிறது.

மகா சிவராத்திரி தினத்தன்று நிலைமைத்தில் விசேட பூசை நடைபெறுவதுடன் சிறுவர், சிறுமிகளின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் மற்றும் இன்னிசை விருந்து, நாடகங்கள் என்பன நடைபெற இருக்கிறது. (81)

---

நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்து 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல், சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச்செபத்தை பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி.

(இ-8794) R.C.R

---

## பதவி வெற்றிடங்கள்

கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தட்டெழுத்தாளர் (தமிழ் / ஆங்கிலம்) - 01

கணக்கு இலிகிதர் - 02

தகுதி: கணக்கியலை ஒரு பாடமாக க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். மேற்படி இருதுறைகளிலும் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 12.3.94**

அனுப்ப வேண்டிய முகவரி:-

நோயாளர் நலன்புரிச் சங்கம்
572, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்

- நிர்வாகம்

(7681)

---

## சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்குமான முக்கிய அறிவித்தல்

10-03-1994 முதல் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஒளியொலி நாடா (வீடியோ) தணிக்கை சபையினரால் இரவு 10-30 மணிக்கு மேல் வீடியோ படம் காண்பிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ் அறிவுறுத்தலை உங்கள் நிலையங்களில் பார்வைக்கு தெரியும்படி குறிப்பிடவும்.

- கலை ஊடக இணையம்

(இ-8796)

---

வர், அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கூறியுள்ளார். இதில் அக்கறையுள்ள அனைவரும் பங்கு பற்ற முடியும். (24)

வர்களும், விவசாயக் கூலி வேலை செய்பவர்களும் 18 வயது முதல் 50 வயதுக்கு இடைப்பட சேர்ந்து கொள்ளலாம் என தொல்புரம் சமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (41)

---

வெற்றிவேலு மாஸ்ரர் நலன்பேணும் பழைய மாணவர் சங்க வருடாந்த

## பொதுக் கூட்டம்

13-3-94 ஞாயிற்றுக்கிழமை

மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டம் 13-03-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை பூதவராயர் கோவில் ஒழுங்கையில் உள்ள வெற்றிவேலு மாஸ்ரரின் இல்லத்தில் நடைபெறும்.

உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமூகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்வதோடு புதிய உறுப்பினர்களாக சேரவிரும்புவோரையும், நலன்விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

க. தங்கராசா
(செயலாளர்)

(இ-8791)

---

இன்று ஆரம்பமாகும்

## மேய்ப்புப்பணி மாநாடு

சிறப்புற வேண்டி வாழ்த்துகிறோம்

**பி. ஐ. பர்னான்டோ**

கண்ணாடி வழங்குநர், பல் கட்டுபவர்

542, மருத்துவமனை வீதி,
(யாழ். போதனா வைத்தியசாலை பிரதான வாயில் முன்பாக)
யாழ்ப்பாணம்.

(இ-8790)

---

## 1994.03.08

1986ஆம் ஆண்டு இதே தினத்திற் யாழ் - அச்செழுப்பகுதியிற்சிறிலங்காப்படையினர்மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய;

**கஜன்** (இரத்தினசபாபதி கணேசகுமார் - வளாய், அச்சுவேலி - யாழ்)

அம்பாறை-நாவிதன்வெளிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள.

1987-ம் ஆண்டு யாழ்-கைதடி, நாவற்குழிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கண்ணன்** (சந்ததயா பாபு-பாபுவீதி, இத்தாவில், பளை)

**லெப்.உத்தமன்** (பூதப்பிள்ளை லவககுமார்- ஏழாலை மேற்கு-யாழ்)

யாழ்-வல்வெட்டித்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**ஸ்ராலின்** (விருத்தாசலம் சிவசங்கர்-சிவசங்கர்வீதி. பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை- யாழ்)

1989-ம் ஆண்டு யாழ்-காங்கேசன்துறை, கீரிமலைப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக்கொல்லப்பட்ட,

நாட்டுப்பற்றாளர்களான மூவர்,

1991-ம் ஆண்டு யாழ்-மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப்.வீரா** (தம்பிமுத்து தர்மசீலன் - ஏறாவூர்-05- மட்டு)

1993-ம் ஆண்டு மன்னார்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வாணன்** (பொன்னுச்சாமி ஈஸ்வரநாதன் - ஆண்டாங்குளம்-வவுனியா)

வவுனியா-ஓமந்தை, வண்ணாங்குளம் காட்டுப்பகுதியில் இனம்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் சாவைத்தழுவிய இனம்பிரித்த,

**லெப்.வாணன்-றெஜி** (கருப்பையா கிருஸ்ண மூர்த்தி- கட்டையடம்பன்- மன்னார்)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட ஆதரவாளர்

**தங்கராசா திலீபன்** (சாந்திரிகூழாங்குளம்- வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ-8789)

யாழ்ப்பாணம்

# நஞ்சு கலந்த நீர் பருகிய 50 தொழிலாளர் ஆபத்து நிலையில்

(கொழும்பு)

தேயிலை செடிகளுக்கு அடிக்கும் பூச்சி மருந்து திரவம் தெளிக்கும் கொள்கலனை தொழிலாளர்கள் குடிக்கும் நீரில் கழுவியதால் அதனை பருகிய சுமார் 50 தோட்டத் தொழிலாளர்கள் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கம்பளையில் நடைபெற்றுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் குடிக்கும் நீர் என தோட்ட மேற்பார்வையாளர்களுக்கும் தோட்டத்துரைக்கும் தெரிந்திருந்தும் அதனை பொருட்படுத்தாது அக் குடிநீரில் கொள்கலன்களை கழுவியமை வேதனைக்குரிய விடயம் என தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி, அமைச்சர் தொண்டமான், சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலில் வென்றவருக்கே பாதுகாப்பு வழங்கப்படும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணம், வவுனியா நகரப்பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்படும்

உள்ளூராட்சி தேர்தலின் பின்னரும் இவர்களுக்கு அரசாங்கத்தினால் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாகவும், தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்களுக்கு பாதுகாப்புகொடுக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி ஆசிரியருக்கு சேவைக்காலப் பயிற்சி

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. சேவைக்காலப் பயிற்சியை வழங்குவதற்காக யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்கள் பலர் கிளிநொச்சிக்குச்செல்லவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. அத்துடன் நன்கு பயிற்றப்படாத ஆசிரியர்களே மேற்படி பாடநெறியை கற்பித்து வருகின்றனர். இதனால் இம்மாவட்டத்தில் ஆங்கிலக்கல்வியின் தரம் கீழ்மட்டத்திலேயே இருப்பதாக கூறப்படுகிறது.

இப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண்பதற்கு வசதியாகவே ஆசிரியர்களுக்கான இவ்வாறான சேவைக்காலப் பயிற்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டின் முதலாம் தவணையின் இறுதியில் வரும் விடுமுறை காலத்தின் போது மேற்படி பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ.சங்கம் தனது பாவனையாளருக்கு அடுத்த கட்ட நான்கு லீற்றர் மண்ணெய் விநியோகத்தை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளது. அத்துடன் முதல் சுற்று நான்கு லீற்றர் மண்ணெய் பெற்றுக்கொள்ளாத பாவனையாளர்கள் இரண்டையும் சேர்த்துபெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (88)

### வி.பொ. காலமானார்

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கம்யூனிஸ்ட் பிரமுகர் வி. பொன்னம்பலம் (65) கனடாவில் மாரடைப்பினால் காலமானார். இவர் யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட்அமைப்பின் செயலாளராகவும் கைதடி நவரேசதயாக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். அளவெட்டி-மல்லாகம் கிராமசபைத் தலைவராகவும் இருந்த இவர், கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவிலும் அங்கம் வகித்தார்.

### பொது அறிவுப் போட்டியில் முதலிடம்

தென்மராட்சி கோட்ட மட்டத்தில் றொட்டரக்ட் கழகம் நடத்திய பொது அறிவுப் போட்டியில் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம் முதலிடம்பெற்றுள்ளது. அத்துடன் தென்மராட்சிக்கோட்ட மட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மகளிருக்கான உடற்பயிற்சிப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட அணி மற்றும் 19 வயதுக்குட்பட்ட [illegible]

## பொலிசாரின் செயலினால் கிராமத்தில் அல்லோலம்

(கிலாபம்)

முந்தல் பொலிஸ் பகுதியிலுள்ள நல்லாந்தழுவ கிராமம் அண்மையில் ஒருநாள் அதிகாலை அல்லோலகல்லோலப்பட்டது. அப்பகுதிக்கு வந்த சிலர் வீட்டிலுள்ள ஆட்களை வெளியேறுமாறு உத்தரவுகள் பிறப்பித்தனர்.

கும் இருட்டிற்குள் ஓசைபடாமல் யாரோ கள்வர் வருவதாக நினைத்து பொதுமக்கள் ''கள்ளன் கள்ளன்'' எனக் குரல் கொடுத்தனர். பள்ளிவாசல் ஒலிபெருக்கியும் பொதுமக்களை கள்வரிடமிருந்து பாதுகாக்குமாறு குரல் கொடுத்தது.

இதனால் பொதுமக்கள் கத்தி, பொல்லுகளுடன் வெளிவந்தனர். வந்தவர்களோடு பொதுமக்கள் மல்லுக்கட்டும் நிலையும் உருவானது பொதுமக்கள் சிலர் தாக்கப்பட்டனர். [illegible] களைப் பொலிசார் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றனர்.

இவ்விஷயம் புத்தளம் எஸ்பி காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டது. பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களும்பொதுமக்களும் பொலிஸ்நிலையம் சென்று நடந்த அவலங்களைப் பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு முறையிட்டனர். அவர் காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார் விசாரணைகள் தொடர்கின்றன.

### கண்நோய் பரவுகிறது

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கொடூர வெப்பத்தாலும், பனம் கொசுக்களின் தாக்கத்தாலும் ஒரு புதுவித கண் [illegible]

# எவர்தயவையும்நாடவில்லை தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

நான் எவர் மீதும் தங்கியிருக்கவும் இல்லை. அதே வேளை நான் யாருக்கும் கடமைப்பட்டவனாகவும் இல்லை. இவ்வாறு இ.தொ.காவின் தலைவரும், அமைச்சருமான எஸ்.தொண்டமான் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளிக்கும்போது தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடுகையில், நான் இன்று விவாதத்திற்குரிய ஒரு பிரமுகராக இருக்கிறேன் என்பதை நானறிவேன். சிங்கள மக்களுடன் எனக்குள்ள உறவு எப்போதுமே அந்நியோன்னியமானது. எனக்கு அவர்கள் மத்தியில் பல நண்பர்கள் உண்டு. நான் பலருக்கு உதவிகள் செய்துள்ளேன். சில முஸ்டாள்கள் மட்டுமே என்னை சிங்கள மக்களின் விரோதியாக காட்டுகின்றார்கள். ஆனால் நான் பெரும்பான்மை சிங்கள மக்களில் நம்பிக்கை வைத்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் பேசும் மக்களும் நல்லெண்ணம் கொண்ட சிலரும் இ.தொ.கா உறுப்பினர்களும். இ.தொ.கா. எதிர்வரும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிட வேண்டுமென விரும்புகின்றனர். இது துரிதமாக முடிவெடுக்கக் கூடிய விடயமல்ல. இது பற்றி தேர்தல் நெருங்கும்போது பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கடற்படை தளபதி கொலை

## தகவல் தர தவறியவர் மீது மேல்நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோ கொலை தொடர்பாக தகவல் தருவதற்கு தவறிய வடபகுதி இளைஞர்மீது மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை மே மாதம் 3ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபயசேகரா முன்னிலையில் நடைபெறவுள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைச் சேர்ந்த தம்பையா சந்திரசேகரனுக்கு எதிரான இவ்வழக்கில் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இணைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுமார் 10 பொலிசார் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே கடற்படைத் தளபதியின் கொலையாளி தங்கியிருந்த விடுதியின் உரிமையாளர் மற்றும் இளம் பெண் ஒருவர் ஆகியோருடன் சில இளைஞர்கள் தகவல் கொடுக்கத் தவறிய குற்றச்சாட்டின்பேரில் பெருந்தொகை அபராதம் செலுத்தியதுடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனைக்கும் ஆளானவர்கள். இதே குற்றத்திற்காக மற்றுமொரு வாலிபர் 5 வருட சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

தற்பொழுது திரு. சந்திரசேகரன் மீதான வழக்கே எஞ்சியுள்ளது. இவ்வழக்கு விசாரணையின்போது சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி, எம். இளஞ்செழியன் ஆகியோருடன் ஜி.ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆகியோரும் அரச தரப்பில் செல்வி ஆயேஷா ஜினசேனவும் ஆஜரானார்கள்.

# வாகரை பிரதேச வேட்பாளர் படையினரால் கைது

(மட்டக்களப்பு)

வாகரை பிரதேச சபைக்கான தேர்தலில் சுயேட்சைக் குழுவின் வேட்பாளர்களில் ஒருவரான விவேகானந்தன் தேர்தல் தினத்தன்று படையினரால் கைது செய்யப்பட்டார்.

வாக்களிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த போது வாக்குச்சாவடிக்கு அருகே வைத்து கைது செய்யப்பட்ட இவர், வாகரை பிரதேச சபையில் ஒன்பது ஆசனங்களை வென்ற சுயேட்சைக் குழுவின் வேட்பாளர்களில் ஒருவர் என்பதும், இவர் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் கைது செய்யப்பட்ட விடயம் தொடர்பாக இச் சுயேட்சைக்குழுவின்தலைமை வேட்பாளர் நா. புதிபராசா படை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

## குடிசை அமைப்பு பணியில் புனர்வாழ்வுக்கழகம்ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பல குடிசைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் 81 குடும்பங்களுக்கு 6,32,080 ரூபா செலவிலும், யாழ்ப்பாணத்தில்225 குடும்பங்களுக்கு 14,62,500 ரூபா செலவிலும், புதிய குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் 5,29,500 ரூபா செலவில் 853 குடிசைகள் திருத்தி அமைக்கப்பட்டன. மக்கள் குடியிருப்புகளில் மூன்று குழாய்க் கிணறுகள் அமைத்து கொடுக்கப்பட்டது. ஆயிரம் குடும்பங்களுக்குபடுக்கைவிரிப்புகள் வழங்கப்பட்டன. இதற்கென 3,40,000 ரூபா செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் முகாம்களில் வாழ்வோருக்கு தனித்தனி நிலம் வழங்கி குடியிருப்பு அமைத்துக் கொடுக்கும் பணியிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

## 3000 தோட்டத்தொழிலாளர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

நுணுகல பகுதியில் அடாவத்தை, கோலன்ஸ், ஒப்டன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டு வருகின்றனர்.

வேலை நாள் குறைப்பு மற்றும் அரைப் பெயர் போடுதல் போன்ற விடயங்கள் உட்பட ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து இவ் வேலை நிறுத்தம் நடைபெறுவதாக பதுளை மாநில இ.தொ.கா பிரதிநிதி என். சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இவ் வேலை நிறுத்தத்தை சுமுகமாகமுடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றபோதும் சுமுகமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

# சர்வோதய தலைவரின் கூற்று பிரசார நோக்கிலானதே

- சர்வோதய யாழ், இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

சர்வோதயா இயக்கத் தலைவர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்னா பி.பி.சி.யின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு வழங்கிய பேட்டியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம் பெயர்ந்தோர் முகாம்களை சர்வோதய நிர்வகிப்பது பற்றி வெளியிட்ட கருத்துக்கள் முற்றிலும் தவறா[illegible] நிர்வகிப்பதற்கு போதிய பொருளாதார வசதியை தலைமை அலுவலகம் அளிக்கவில்லை. இந்த நிலையில் சர்வோதய தலைவரின் இத்தகைய கூற்று எமக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. இத்தகைய உண்மைக்கு புறம்பான கூற்றுக்களை வெறும் [illegible] தெரிவிப்பது எமக்கு வேதனை தருவதாகும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் பி.பி.சி. சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டி தொடர்பான மறுப்புக் கருத்துக்களை சர்வதேச செஞ்சிலுவைக் குழு மூலம் உடன் அனுப்பவிருப்பதாக [illegible]

### கண்டெடுப்பு

நியோ முடியப்பு அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கு சொந்தமான மோட்டார் ஊர்திப் பதிவுச் சான்றிதழ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### நிர்வாகிகள் தெரிவு

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தில் நிகழும் [illegible]

நடைபெற்ற மகளிருக்கான உடற்பயிற்சிப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட அணி மற்றும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் இப்பாடசாலை முதலிடத்தையும், 17 வயதுக்குட்பட்ட அணியில் இப்பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது.

ளோடு பொதுமக்கள் மல்லுக்கட்டும் நிலையும் உருவானது பொதுமக்கள் சிலர் தாக்கப்பட்டனர்.

பின்னர் வந்தவர்கள் தேடுதல் நடத்தவந்த பொலிசார் என அறிந்ததும் பொதுமக்கள் ஆறுதலடைந்தனர். தங்களுடன் மல்லுக்கு வந்தவர்

தில் தற்போது ஏற்பட்டுள்ள கொடூர வெப்பத்தாலும், பனம் கொசுக்களின் தாக்கத்தாலும் ஒரு புதுவித கண் நோய் வேகமாகப் பரவிவருவதாக அறியவந்துள்ளது.

வைத்தியசாலைகளிலும் இந்நோய்க்கு வைத்தியம் செய்து வருவதை அவதானிக்க முடிகிறது. (24)

அமரர் செல்வாவைப் போல

# தலைவர் தொண்டமானும் பதவி துறந்திருக்க வேண்டும்

## செல்லச்சாமி கூறுகிறார்

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தனது யோசனைகளை தலைவர் தொண்டமான் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தெரிவித்திருந்தார். அவர் அதனை ஏற்றுக்கொள்ளாத நிலையில் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முன்பாக இ.தொ.காவின் யோசனைகளாக அது முன்வைக்கப்பட்டது. தெரிவுக்குழுவும் அந்த யோசனைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து நாம் வெளியேற நேரிட்டது. அந்த தருணத்தில் அமரர் செல்வநாயகம் தனது எம்.பி. பதவியை துறந்ததுபோல் நீங்களும் உங்கள் பதவியை இராஜினாமா செய்யுங்கள்; இப்பிரச்சினையை மக்கள் முன் எடுத்துச் செல்வோம் என நான் குறிப்பிட்டேன்; ஆனால் அவர் அதனை ஏற்கவில்லை; அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டார்: இவ்வாறு அமைச்சரும், இ.தொ.காவின் பொதுச் செயலாளருமான எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

இ.தொ.கா அரசியல் பிரிவின் கொழும்பு அமைப்பாளர்கள் மத்தியில் பேசிய அவர் தொடர்ந்து கூறுகையில்; இ.தொ.கா தனது பலத்தைக் காட்டுவதற்கான சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு விட்டு காமினியைப் பிடிக்கப் போய் அது குரங்கு பிடித்த கதையாகி விட்டது. ஆனால் இதே தேர்தலில் இ.தொ.காவின் உறுப்பினர்கள் அதிகளவில் வாழும் மத்திய மாகாணத்தில் நமது பிரதிநிதிகள் எவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் நமக்கு 53 ஆயிரம் வாக்குகள் இருந்தும் நமது வேட்பாளர்கள் இருவரும் வெற்றியீட்டவில்லை.

1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தமிழ், சிங்கள முஸ்லிம் மக்களின் ஏகோபித்த ஆதரவினால் நான் வெற்றியீட்டினேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக இருக்கிறேன்; ஆனால் தலைவர் தொண்டமானோ தேசியப் பட்டியல் மூலமே பாராளுமன்றத்திற்கு வந்தவர் ஆவார் எனவும் தெரிவித்தார்.

யாழ். திறந்த பல்கலைக்கழக

# டிப்ளோமா மாணவர் மீள்பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் திறந்த பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு ஏற்கனவே பதிவு செய்த மாணவர்கள் மீள் பதிவு செய்யும்படி கோரப்பட்டுள்ளனர்.

1987 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் மேற்படி பயிற்சி நெறிக்கு பதிவு செய்த மாணவர்கள் தாம் பதிவு செய்து கொண்ட பாடவிபரங்கள், இறுதியாக தாம் உள்ள நிலை ஆகியவற்றுடன் தமது பதிவுப் புத்தகம் ஆகியவற்றுடன் மீள் பதிவுக்கான விண்ணப்பம் ஒன்றை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி யாழ். பிராந்திய இயக்குநர் கேட்டுள்ளார்.

இதேபோன்று ஏற்கனவே முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சிநெறிக்கு பதிவுசெய்து கொண்ட மாணவர்களும் மாணவர் பதிவுப் புத்தகத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்தோர் முகாம்களை சர்வோதய நிர்வகிப்பது பற்றி வெளியிட்ட கருத்துக்கள் முற்றிலும் தவறானதாகும் என்று சர்வோதய நிறுவனத்தின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் நேற்றுப்பேசிய அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் சர்வோதய நடவடிக்கைகள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், பல மாதங்களாக ஊழியர்களின் மாதாந்த வேதனம்கூட வழங்கப்படாத நிலையிலும் தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எந்தவொரு இடம் பெயர்ந்தோர் முகாம்களை

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிமனையின் முகாமைத்துவநிலையத்தில் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

யாழ்ப்பாணப் பேராலயத்தில் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் கூட்டுத் திருப்பலியுடன் யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மகாநாடு ஆரம்பமாகவுள்ளது. (17)

ஃ ஃ

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் உடற்பயிற்சிப்போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ்ப்பாண வர்த்தக வங்கி முகாமையாளர் ஆர். வெங்கட்ராமன் முதன்மை விருந்தினராகவும், டாக்டர் பொ. சிவபாதம், திரு. க. செழியன் ஆகியோர் சிறப்பு மற்றும் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிலைய கூற்று எமக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. இத்தகைய உண்மைக்கு புறம்பான கூற்றுக்களை வெறும் பிரசார நோக்கில் அவர்

பேட்டி தொடர்பான மறுப்புக் கருத்துக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உடன் அனுப்பவிருப்பதாகவும் குறிப்பிட்டார். (நி)

யாழ்ப்பாணத்திலுள்ள

# 134இட. பெயர்ந்தவர் முகாம் சர்வோதய நிர்வகிக்கிறது

## - ஏ. ரி. ஆரியரத்னா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள 233 இடம்பெயர்ந்தோர் முகாம்களில் 134 முகாம்களை சர்வோதய நிர்வகிப்பதாக யாழ்ப்பாண பிராந்திய இயக்குனர் தெரிவித்ததாக சர்வோதய இயக்கத்தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா பி. பி. சி. யின் சந்தேசிய சிங்கள ஒலிபரப்புக்கு அளித்த பேட்டியின்போது அறிவித்தார்.

அவர் அப்பேட்டியில் மேலும் கூறுகையில், தமது நிறுவனத்தால் பராமரிக்கப்படும் எல்லா முகாம்களுக்கும் தமது யாழ்ப்பாண விஜயத்தின் போது நேரில் விஜயம் செய்ய முடியாத போதும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர்களில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானோரை நிர்வகிப்பதில் சர்வோதயம் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்து இருந்தார்.

# ஆரியரத்னாவின் கூற்று அதிர்ச்சி தருவதாகஉள்ளது

## - இணைய இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பகுதியில் முப்பத்திநான்கு இடம்பெயர்ந்தோர் முகாம்களை மட்டுமே சர்வோதய மேற்பார்வை செய்கிறது இது தவிர சர்வோதய அமைப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேறெந்தநிவாரண நடவடிக்கையிலும் ஈடுபட்டிருக்கவில்லை. இவ்வாறு யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் இணைப்பாளர் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சர்வோதய தலைவர் ஆரியரத்னா பி.பி.சி பேட்டியில் குறிப்பிட்ட 134 முகாம்களையும் சேர்ந்த இடம் பெயர்ந்தோரான மக்களில் ஐம்பது சதவீதத்தையும் நிர்வகிப்பதான கூற்று மிகவும் தவறானதாகும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிடும் வருடாந்த அறிக்கைகளில் எந்த எந்த அமைப்புக்கள் எந்தெந்த இடங்களில் பணிகளை மேற்கொள்கின்றன என்பது தெளிவாக விளக்கப்பட்டிருப்பதாகவும், சர்வோதய தலைவரின் கூற்று உள்ளூரில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டை மிகவும் பாதிப்பதாக இருக்குமெனவும், இத்தகைய தவறான பிரசாரங்களை எதிர்காலத்திலும் இணையம் தொடர்ந்து ஆதரிக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். (நி)

## தெரிவு

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியக் கழகத்தில் நிகழும் கல்வி ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு தமிழீழ மாணவரமைப்பு பொறுப்பாளர் ந. இன்பன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. ஸ்ரீ. கௌரி தலைவராகவும், ஆ. பரமேஸ்வரி செயலாளராகவும், ந. தயானந்தன் பொருளாளராகவும் இ. நித்தியானந்தன், இ. குகதாசன் ஆகியோர் பத்திராதிபர்களாகவும், மா. ஜெயக்குமார் உபதலைவராகவும், எஸ். லோகச்சந்திரன் உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் அறுவர் நிர்வாகசபை உறுப்பினர்களாகதெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் புதிய ஆண்டிற்கான ஆலயவழிபடுவோர் சபைக்கான நிர்வாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் முன்னிலையில் இடம்பெற்ற இத் தெரிவின் போது அ. நாகராசா தலைவராகவும், எஸ். கே. உதயசூரியர் செயலாளராகவும், அ. அழகேந்திரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் 22 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவாகினர். (07)

ஃ ஃ ஃ

வடபிராந்திய ஆங்கில மருந்து வர்த்தக சங்கத்தின் புதிய ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் பா. விங்கநாதன் தலைவராகவும், மு. பத்மநாதன் செயலாளராகவும், மு. ஜெகநாதன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர் வி. சுரிதாஸ், து. செல்வராசா ஆகியோர்முறையே உபதலைவராகவும், உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர் எண்மர் தெரிவாகினர்.

# யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபை மேய்ப்புப்பணி மகாநாடு

**1994 மார்ச் 8 முதல் 14 வரை**

**புனித பத்திரிசியார் கல்லூரி**

**தன்னைப் புதுப்பித்து பகிரும் திருச்சபையை நோக்கி...**

## போராட்டத்தின் நடுவில் எம்மைப் புதுப்பித்து பகிரும் ஓர் திருச்சபை யாக நாம் மாற முடியும்

யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் நடக்கப் போகின்ற மேய்ப்புப்பணி மகாநாடு முதலாவதாகும். இது மறைவட்ட வளர்ச்சியில் முக்கியமான தாகும். அந்த வகையில் சரித்திரவரலாற்று ஏடுகள் யாழ். மறைமாவட்ட வளர்ச்சியின் முக்கிய மைல்கல்லான இம்மகாநாட்டை நிச்சயம் பொறித்து வைக்கப் போகின்றன.

எமது திருஆளுகையின் கீழ் இம்மகாநாட்டைக் கூட்டவும் வழிநடத்தவும் இறைவன் வரமருளியமை எமக்குக் கிடைத்த பாக்கியமென்றே கருதுகின்றோம். தூய ஆவியின் வழிநடத்துதலால் இம்மகாநாடு மறைமாவட்டத்திற்குத் தேவையானவற்றைச் செய்யவும், மாற்றவேண்டியவற்றை மாற்றவும், புதுப்பிக்க வேண்டியவற்றைப் புதுப்பிக்கவும், சரியான உண்மைகளை எடுக்கவும் வழிவகுக்குமென நம்புகிறோம்.

பழம்பெருமை வாய்ந்த யாழ் மறைமாவட்டம் இலங்கையின் பல மறைமாவட்டங்களுக்குத் தாய்மறைமாவட்டமாக இருந்தது என்பது சரித்திரம் கூறும் உண்மை. இன்று எமது யாழ்மண்ணின் பிரச்சினைகளுக்கு நாமும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாட்டின் நிலைமை எப்படி இருந்தாலும் காலத்தின் தேவையை உணர்ந்து கஷ்டங்களையும் துன்பங்களையும் பொருட்படுத்தாது. இறைவனின் துணையை நம்பி இம்மகாநாட்டைக் கூட்டுகிறோம். இத்துன்பங்கள் நடுவிலும் எந்தையும் எம்மோடு இணைந்து செய்ய ஆயத்தம் என்று குருக்களும் இறைமக்களும் துணைநிற்பது எமக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. "உள்ளத்தின் ஆழத்தில் உங்களையும் புதுப்பித்துக் கொள்ளுங்கள், உண்மையால் ஏற்படும் நீதியிலும் புனிதத்திலும் கடவுள் சாயலாக படைக்கப்பட்ட புதிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்'' (எபே 5; 23-24) போராட்டத்தின் நடுவில் எம்மைப்புதுப்பித்துப் பகிரும் ஓர் திருச்சபையாக நாம் மாறமுடியும். இதற்கு இம் மகாநாடு புத்தூக்கமும் ஆர்வமும் தரும். எமது இன்னல்கள் மத்தியிலும் சவால்களைச் சந்தித்து துன்பங்களை எதிர்நோக்கி விசுவாசத்தை உறுதிப்படுத்திப் பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக எம் மத்தியில் உள்ள அனைத்து மக்கள் மத்தியிலும் வாழ்வோம்.

† தோமஸ் சவுந்தர்நாயகம்
யாழ் மறைமாவட்ட ஆயர்

## அடுத்துவரும் நூற்றாண்டை நோக்கி...

அடுத்த நூற்றாண்டின் முதற் காலில் யாழ்ப்பாணக் கத்தோலிக்கத் திருச்சபை ஐந்து நூற்றாண்டு கால நிறைவினை அண்மித்து நிற்கும் போர்த்துக்கேய கலாசார வாசனைகளுடன் தமிழ் மண்ணில் வளர்ந்த கத்தோலிக்க கிறிஸ்தவம் கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலான காலத்தில் தன்னையும் வளர்த்து தமிழையும் வளர்த்ததென்பது உண்மையேயாயினும் இவ்வளர்ச்சியின் பன்முகக் கூறுகள் என்றும் பயனுள்ளவையாக இருந்தனவா என்பது பரிசோதித்துப் பார்க்கப்பட வேண்டிய தொன்று.

விஞ்ஞான யுகத்தின் விலக்க முடியாத விளைபொருளாக எதிர்காலத்தை நோக்கி எம்மை விரைவாக உந்தி நிற்கும் மாற்றங்களுக்கு ஏற்ப எமது மனநிலைகள் வளர்வில்லையென்றால் எமது சமய வாழ்வு சாரமற்றதாகிவிடும். எனவே திருச்சபையானது விசுவாசிகளின் குழுமமாக மட்டுமன்றி நம்பிக்கையின் சமூகமாக எதிர்காலத்தை எடைபோட வேண்டும்.

யாழ் திருச்சபையின் முக்கியத்துவம் வாய்ந்த இம்மகாநாடு இத்தகையவோர் பரிசோதனையைத் தீர்க்கதரிசன தேயத்துடனும், திறந்த விரிந்த மனத்துடனும், திடம் நிறைந்த தரிசன வீச்சுடனும் சமகாலச் சவால்களைச் சிந்திக்கும் நம்பிக்கைமிக்க நல்லுணர்வுடனும் எதிர்நோக்கும் போது இம்முயற்சி முழுமையும் செழுமையும் பெறுமென்பதில் ஐயமில்லை. இதனை மனங்கொண்டு சில எண்ணக் கருக்களை இங்கு எடுத்துரைக்கின்றேன்.

கிறிஸ்தவர்களின் பரிபாஷையில் கூறுவதாயின் "இக்காலம் பொது நிலையினரின் பொற்காலமென்று'' சிலாகித்துப் பேசப்படுவதுண்டு. திருவழிபாடுகள் அவைக் காற்றுச் சடங்குகள் போன்றும், ஆலயத் திருப்பணிகள் திருவுடையார்க்கே என்றும், பொது குருத்துவம் பொது நிலையினரதே, ஆனால் பொறுப்புக்களனைத்தும் குருக்களின் கையில் என்ற குறுகிய அதிகாரப் போக்குக் குன்றாத வரைக்கும் பொது நிலையினரின் சமய நிலை மாறாச் சமநிலையில் ஊறு பட்டிருக்குமென்பது உள்ளுணர்வால் ஏற்று நிவர்த்தி செய்யப்பட வேண்டியதொன்றாகவே இப்போரவை ஏற்றிட வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கம் அரசுக்கு மட்டும் சிபார்சு செய்யப்பட வேண்டிய அறப்பொருளல்ல. அது அந்தரங்க சுத்தியோடும், ஆத்மார்த்த உணர்வோடும் மறைவட்டப் பணிகள் பலவற்றில் ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய அருங்கொடையென்பது அலட்சியம் செய்யக்கூடியதொன்றன்று.

மேற்கு நாடுகளிடமிருந்து அனைத்தையும் பெறவேண்டுமென்ற தங்கிவாழும் மனப்போக்கு மாறி சுய வாழ்வுத் திட்டங்களை ஊக்குவிப்பதோடு எம்மிடமுள்ளவற்றை எல்லோருடனும் பகிர்ந்து வாழும் ஏற்றம் நிறைந்த பரந்த உள்ளம் பெறுவதற்கான வழிகளை இனம் காணவேண்டும்.

போர் ஓடுங்கின் சமாதானம் ஓங்கும் என்ற குறுகிய நோக்கிலல்லாது சமூக நீதி, பொருண்மிய நீதி, இனத்துவ நீதி, கலாசாரநீதி, சமயநீதி, போக்குப் பாங்கு முதலிடம் பெறவேண்டும்.

"மொத்தத்தில் இந்த மகாநாடு பழமையின் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளையும், புதுமையின் இன்றியமையாத கூறுகளையும் அவற்றின் தேவையுணர்ந்து உள்வாங்குதல் அவசியம். காலத்தின் குறியீடுகளை நன்குணர்ந்த நிலையில் மாற்றத்தை மகிழ்ச்சியுடன் மனதார வரவேற்று சொல்லில் மட்டுமன்றி செயலால் அதை நடைமுறைப்படுத்தும், உறுதியான உரமான உள்ளுணர்வோடு ஆண்டவனின் அருட்பொழிவை வேண்டுமாயின் உண்மையில் இந்த மகாநாடு அண்மைக் காலத்தில் நிகழ்ந்த திருவருட் செயல்களுள் ஒன்றாக எதிர்வரும் நூற்றாண்டில் எடைபோடப்படுமென்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அருட்கலாநிதி
ஏ. ஜே. வி.
சந்திரகாந்தன்

## எமது தலத்திருச்சபை இம்மண்ணிற்கும் மக்களுக்கும் புறம்பே அல்ல

யாழ். தலத்திருச்சபையின் முதலாவது மேய்ப்புப் பணி மகாநாடு இறையருளால் இவ்வருடம் நடைபெறுகின்றது. இது எமது திருச்சபையின் சரித்திரத்தில் ஓர் முக்கிய திசை திருப்பும் நிகழ்வாக இருக்க ஆவியானவர் வழிவகுக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

அசாதாரணபோர்ச்சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு ஏன் மகாநாடு நடாத்த வேண்டுமென்று பலர் வினா எழுப்புவர். இது இன்றைய நிலைமையால் அவசரமாக வேண்டப்படும் ஓர் மனம்திரும்புதலின் நிகழ்வு. யாழ். தலத்திருச்சபையைச் சேர்ந்த ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் நற்செய்தியின் ஒளியில் நடந்து கொண்டிருக்கும் அகோர சம்பவங்களின் அறிகுறிகளை உள்வாங்கி ஆவியின் உந்து சக்தியுடன் இறைவனை நோக்கியும் அயலவனை நோக்கியும் மனம்திரும்புவதே இந்நிகழ்வில் உயர்ந்த இலட்சியமாகும்.

எமது தலத்திருச்சபை இம்மண்ணிற்கும் மக்களுக்கும் புறம்பே அல்ல, இம்மண்ணிலுள்ள அத்தனை மெய்மைகளுக்கும் புத்துயிர் அளிக்கவே அழைக்கப்பட்டிருக்கின்றது. எமக்களிக்கப்பட்ட இறைவார்த்தை, இறையனுபவம், திருவருட்சாதனங்கள், குழுவாழ்வு அத்தனையும் இம்மெய்மைகளின் மீட்புக்காக புதுப்பித்தலுக்காகப் பகிரப்பட வேண்டுமென்பதே எமது புதிய நோக்கும் பணியுமாக இருகக வேண்டும்.

அருட்கலாநிதி எஸ் ஜே. இம்மானுவல்
யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர்

## மக்களின் மனங்களில் மகாநாடு...

**ஓர் நேரடிச்சந்திப்பு**

மகாநாடு பற்றிய பலதரப்பினரின் மனஎண்ணங்களைப் படம் பிடிப்பதற்காக நாம் புறப்பட்டோம். தங்கள் மனஎண்ணங்களை எங்கள் படப்பிடிப்பிற்கு அவர்கள் திறந்து விட்டபோது......

யாழ் அடைக்கல நாயகி பங்குத்தந்தையும் மகாநாட்டுப் பொதுச் செயலருமாகிய அருட்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகள்,- மகாநாட்டில் மக்களின் ஈடுபாடு குறைவு என்றுதான் நினைக்கின்றேன்: காலத்தின் சூழ்நிலையும் மக்களின் இடம்பெயர்வும் இதற்குக்காரணமாக இருக்கலாம். மகாநாடு புதுப்பித்தலை வேகப்படுத்தும் ஒன்று. புதுப்பித்தல் ஒரு தொடர் நிகழ்வு. இம்மகாநாடு விழிப்புணர்வை ஏற்படுத்தி புதுப்பித்தலை வேகப்படுத்துகின்றது. மூன்றாவது ஆயிரமாம் ஆண்டு, ஒரு புதிய யுகம் யாழ் தலத்திருச்சபைக்கு ஓர் புதிய ஆயர், இவையெல்லாம் புதுப்பித்தலை வேகப்படுத்துகின்றன.

யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. சூ சிறில் அவர்களை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் சந்தித்தபோது;- புதுப்பித்தல் என்று சொல்லும்போது வளர்ச்சி என்ற கருத்தை நாம்விளங்கிக்கொள்ள வேண்டும். புதுப்பித்தல் என்னும்போது பிழையானபடியாலோ அல்லது தவறு என்ற படியாலோ நாம்புதுப்பிக்கின்றோம் என்று கருதக்கூடாது. புதுப்பித்தல் என்பது பழைய ஒன்றில் இருந்து முன்னேறி வளர்ந்து புதி

## மகத்தான வரலாற்று நிகழ்வு

கடந்தசில மாதங்களாக மேய்ப்புபணிமகாநாடு என்ற செய்தி பல செவிகளிலும் மனங்களிலும் பலமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. இன்று எங்கு நோக்கிலும் மகாநாடு

...ற்குப் பிரதிநிதியாகப் போனோம். நாமும் மகாநாட்டுக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வசித்தோம் எனபலர் பல காலத்திற்குப் பெருமை பேசப்போகிறார்கள்.

...யப் போகிறார்கள்.

வத்திக்கான் சங்கம் ஏறக்குறைய 28 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. இன்றும் அது பற்றி பேசப்படுகிறது.

அதனைக் கூட்டிய திருத்...

...துக்கொண்டிருக்கிறது. இன்று எங்கு நோக்கினும் மகாநாடு ஓர் முக்கிய இடம்பெற்றிருப்பது தெரிகிறது. கூட்டங்கள், கருத்தரங்குகள், பிரசுரங்கள், சிந்தனைகள் என்று நடக்கின்ற விடயங்களைப் பார்த்து மகாநாடு பற்றி அறிய ஆர்வம் இல்லாதவர்கள் கூட இது ஓர் முக்கிய சரித்திரநிகழ்வு என்பதைப் புரிந்துள்ளார்கள்.

இவ்ஆண்டு வரலாற்று ஏடுகள் இந்த நிகழ்வை இந்த சகாப்தத்தின் சிறப்பு மிக்க முக்கிய நிகழ்வாக பொறித்து வைக்கப்போகின்றன. இனி வரும் பலவிடயங்களுக்கு இம்மகாநாடு உற்றுநோக்கப்படப் போகின்றது இம்மகாநாட்டின் செயல்பாடுகள் இன்னும் பல காலத்திற்கு நடந்துகொண்டிருக்கப்போகிறது. மகாநாட்டோடு எல்லாம் முடியப்போவதில்லை.

நாங்கள் 94 மகாநாட்டி...

பல காலத்திற்குப் பெருமை பேசப்போகிறார்கள்.

திருத்தந்தையின் "அனைத்துலக மக்களே, நமதாண்டவராகிய கிறிஸ்துவுக்கு கதவைத் திறந்து விடுங்கள்" என்ற அழைப்பை ஏற்று தேசிய ரீதியில் கொழும்பிலும் மறைமாவட்டங்கள் ரீதியில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் இது செயல்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபை வரலாற்றின் வளர்ச்சிப் படிகளில் இது முதலாவதும், முக்கியமானதுமான மைல்கல் என குறிப்பிடப்படுகிறது. வேறு பல நிகழ்வுகள் நடந்தாலும் இது போன்ற ஒரு மகாநாடு நடத்தப்படுவது இது தான் முதல் தடவையாகும். எல்லாப்பங்குக் குருக்களும், துறவியர், அருட்சகோதரிகள், அருட்சகோதரர், பொது நிலையினர் என 262 பிரதிநிதிகள் ஒன்றாகக்கூடி ஆய்வுசெய்...

அது பற்றி பேசப்படுகிறது.

அதனைக் கூட்டிய திருத்தந்தை 23-ம் அருளப்பர் பாக்கியம் பெற்றவராகிவிட்டார். யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபையின் "வத்திக்கான் சங்கம் இதுதான்" வத்திக்கான் சங்கம் இதுவரை எடுத்த

**அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

முக்கிய இடத்தை யாழ் மேய்ப்புப்பணி மகாநாடு இனி வரும் காலத்தில் எடுக்கப்போகிறது என்று கூடச் சொல்லலாம். இம்மகாநாட்டை கூட்டும் ஆயர் அவர்களும் பாக்கியம் பெற்றவராகிறார்.

இன்று எமது மண்ணின் போர்க்காலச்சூழ் நிலைகள் மத்தியிலும் இம் மகாநாடு நடாத்தப்படுவது அதன் முக்கியத்துவத்திற்கு இன்னும் வலுவூட்டுவதாய் அமைகின்றது.

பொருண்மிய நீதி, இனத்துவ நீதி, கலாசாரநீதி, சமயநீதி, போன்றவற்றினூடாக பூரண மனித மீட்பு என்ற விடுதலையின் நீதியை விரித்துப்பார்க்கும் பேருணர்வு வேண்டும். ஏழ்மை, எளிமை, சமத்துவம் சகோதரத்துவம் ஆகியனவற்றை எமது வாய்ச்சொல்லாக மட்டுமல்லாது வரலாற்றின் வளர்ச்சியாக விதைத்து வளர்க்க வழிதேடவேண்டும் என்னுரிமை முன்னுரிமை எமதுண்மை முதலுண்மை என்ற தனிச் சமயமுதல்வாதப் போக்கு அகன்று, படைப்பின் வழி பரமதந்தையும், இறப்புயிர்ப்பின் வழி கிறிஸ்துவும் - அவர் பணியின் அறாத் தொடர்ச்சியான பங்கெடுப்பில் திருச்சபையும் "தம்மையே வெறுமையாக்கும்" தார்மீகப் பணியில் தழைத்துமேலோங்கத்தளராது முயலவேண்டும் எமது அன்றாட வாழ்வின் அவலங்களிலும், அந்தரிப்புகளிலும் எந்நாளும் எந்த இடத்திலும் ஆண்டவனின் குரலையும் அவர்தரும் செய்திகளையும் கேட்கும் நம்பிக்கை நிறைந்த நல்மனதினை வளர்ப்பதற்கான வழிமுறைகளை அடையாளம் காணவேண்டும்.

பழையனவற்றைப் புனரமைப்பதும் பாரம்பரியத்தில் நியாயம் தேடுவதும் பின்நோக்கிப் பார்க்கும்செயல்களாய், வருங்காலத்துக்குப் புறமுதுகு காட்டும் தேடல்களாய் அமைந்துவிடக் கூடாது. எனவே நிகழ்காலத்தை நிதானத்தோடு விளங்குவதன் மூலம் எதிர்காலத்திற்கு ஏற்றத்துடன் முகம் கொடுக்கும் முற்...

பிழையானபடியாலோ அல்லது தவறு என்ற படியாலோ நாம்புதுப்பிக்கின்றோம் என்று கருதக்கூடாது. புதுப்பித்தல் என்பது பழைய ஒன்றில் இருந்து முன்னேறி வளர்ந்து புதியதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். மனிதர்களைத் தலைவர்களாகக்கொண்ட நிலையங்கள், ஸ்தாபனங்கள் அழிந்துபோகும். ஆனால் திருச்சபையோ கிறிஸ்துவையே தலைவராகக்கொண்டிருப்பதால், புதுப்பித்துப் புதுப்பித்து வளர்ந்துகொண்டே இருக்கும்.

யாழ் திருக்குடும்ப கன்னியர்மட உதவிமாகாணத்தலைவியும் ஆங்கிலப் பாடசாலையின் அதிபருமான அருட்சகோதரி ஜோலன் அவர்களை விளையாட்டுமைதானத்தில் சந்தித்த போது;- எந்தஒரு விடயத்தையும் நூறுக்கு நூறுவீதம் நாம்எதிர்பார்க்க முடியாது. நடக்கின்றவற்றில் நாம் நூறுக்கு நூறுவீதம் பங்குபற்ற வேண்டும். விழிப்புணர்வு என்பது இதுபோன்ற ரீதியில் நடைபெறுவது இதுவே முதல்தடவையென நினைக்கின்றேன். இது இன்னும் நேரத்தோடேயே நடைபெற்றிருக்கவேண்டும். வத்திக்கான் சங்கம் நடைபெற்று இவ்வளவு காலத்தின் பின்னரும் அதுபற்றிப் பொதுநிலையினர் முழுமையாக அறியாது இருப்பது ஒருதவறாகும். உரியவிதமாகத் தயார் செய்யப்பட்டால் மக்கள் மாற்றங்களுக்குத் தயாராவர்.

யாழ் மனிதமுன்னேற்ற நிலைய இயக்குனரும் மேய்ப்புப்பணி மகாநாட்டுப் பொது மக்கள் தொடர்புக்குழு தலைவருமாகிய அருட்திரு. ஜெபநேசன் அவர்களை அவரது மேல் மாடிக்காரியாலயத்தில் இதுபற்றிக் கேட்ட போது:- இன்று உலகளாவிய ரீதியில் மனித மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். இவ்வுலகம்தான் அனைத்தும் என்று நினைக்கின்ற அவனைத்தட்டி நிறுத்தி உன்நோக்கம் என்ன என்று கேட்டு பரிசுத்த தனத்திற்கும் இறை உறவிற்கும் இட்டுச்செல்வதே மகாநாட்டின் நோக்கம். இந்த மகாநாடு வெளிப்படையாக ஏதோ பிரமாண்டமான திடீர் மாற்றங்களைக் கொண்டு வந்து பெரிய சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்பது பலரின் எதிர்பார்ப்பு. அப்படி ஏதும் நடைபெறாவிடினும் இம்மகாநாடு நிச்சயமாக புதுப்பிக்கும் ஓர் உறுதியான அனுபவமென நான் நம்புகிறேன். இறைவனோடு ஒன்றித்த செயல்பாடுகளே இவற்றில் வெற்றியளிக்கும் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

அரியாலைப் பங்கைச்சார்ந்த 11-ம் ஆண்டு மாணவன் ஆ. ஒஸ்ரின் அயந்குமாரிடம் மகாநாட்டைப்பற்றிக் கேட்டபோது.- மகாநாடு என்றால் என்ன என்று தெரியாது. இது தான் முதல் மகாநாடு என்று அறிகின்றேன். 8-14ந் திகதிவரை மகாநாடு நடைபெறுகின்றது என்று அறிவிக்கப்பட்டது மகாநாட்டுப் பங்குக்கருத்தரங்குகளில் நான் கலந்து கொண்டேன். வினாக்கொத்துக்கள் நிரப்பப்பட்டதும் எனக்குத்தெரியும். மகாநாடு மக்களுக்குப்புதிய மாற்றத்தைக்கொண்டு வரும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். அதையே நானும் எதிர்பார்க்கிறேன்.

நாரந்தனைப் பங்கில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது சென்யூட் முகாமில் வசிக்கின்ற பி. லுமினாவை முகாமில் சந்தித்தபோது:- புதுப்பித்தல் என்றால் பழையதைக் களைந்து புதிய சிந்தனையை புதிய மாற்றத்தை ஏற்படுத்துதல் எனநினைக்கின்றேன். இந்த மகாநாடு பற்றிய பல நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, இம்மகாநாடு மிகவும் முக்கியம் வாய்ந்தது என நினைக்கிறேன். இம்மகாநாடு யாழ் கத்தோலிக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றேன். இடம் பெயர்ந்திருந்தாலும் இம்மகாநாடு பற்றி நிறைய விடயங்களை அறிந்திருக்கின்றேன்.

## எழுச்சிப்பாடல்

புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக
புத்தொளி அளிப்பீர் தூய ஆவியே!
புதுஉளம்படைத்து இறைமக்கள்ஒன்றாக
எழுவோம் — எம்மைப் புதுப்பித்துப்பகிர,

புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக
புதுக்களம் அமைத்து மறைபணி ஆற்றிட,
அருள்வளம்செழித்தஇறைஅநுபவத்தைப்
பெறுவோம்... எம்மைப் புதுப்பித்துப்பகிர

## மார்ச் 8

**ஆரம்ப நிகழ்வுகள்**

பி.ப. 3-30 கூட்டுத்திருப்பலி
யாழ். மரியன்னை
பேராலயம்

**சகல கத்தோலிக்க மக்களும் அழைக்கப்படுகிறார்கள்**


## மகாநாடு சிறப்புற வாழ்த்துபவர்கள்

**யாழ். ப. நோ. கூ. சங்கம்** | **கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி பக்தன்**

பொதுமக்கள் தொடர்புக்குழு - மேய்ப்புப்பணி மகாநாடு (இ-8792)

## சிந்தனைக்கு

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ,தில்லையாம்

- மகாகவி பாரதி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## மகளிர் எழுச்சிநாள்

மார்ச் - 08

ஒடுக்கப்படும் பெண்ணினத்தின் எழுச்சிநாள்; வரலாற்றுக்காலம் தொட்டே பெண்ணினம் சமத்துவம் அற்றதாக, அடிமைத்தளையில் சிக்குண்டு அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றது, இயற்கையான பால் அடிப்படையிலான வேறுபாட்டால் ஏற்பட்ட இச்சமத்துவமின்மை சமூகத்தில் பெண்களை அடிமட்டத்தில் தள்ளிவிட்டிருந்தது; இதன் அடிப்படையில் உருவான பண்பாட்டுக் கோலங்களும் பெண்களுக்குச் சமூகத்தில் சமநீதி வழங்கத் தவறிவிட்டன.

இதன்காரணமாக உலகில் அரைப்பங்கு சனத்தொகையைக் கொண்ட பெண்ணினம், ஒடுக்கப்படும் இனமாகியது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் பெண்கள் பொருளாதாரரீதியில் பங்களிப்புக்களைச் செய்கின்றார்கள். எனினும் அவை கண்டுகொள்ளப்படுவதாக இல்லை பெண்களின் தொழில் ஈடுபாடு பொருளாதாரப் பெறுமதியற்றதென்ற ரீதியிலேயே நோக்கப்படுவதாகவும் உள்ளது

ஆனால், அண்மைக்காலத்தில் உலகில் பெண்களின் உரிமை தொடர்பான குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன; ஆனால், இவற்றில் எந்தளவு முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன என்பது கேள்விக்குரியதாகவிருப்பினும், இதுகுறித்த விழிப்புணர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்டுவருகின்றது. ஆனால் இவ்விழிப்புணர்வு பெண்களின் கல்வி, பொருளாதாரம் என்பனவற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்டதாக உள்ளது; பொதுவாகவே கல்வி, பொருளாதார வளர்ச்சிபெற்ற சமூகங்களில் பெண்களின் உரிமைகள். அந்தஸ்து, கல்வி அறிவு குறைந்த, பொருளாதார வளர்ச்சியற்ற சமூகங்களை விட உயர்ந்தே காணப்படுகின்றன;

எமது சமூகத்தைப் பொறுத்தவரையில், பண்பாட்டு நியமங்களும், மூட நம்பிக்கைகளும், சமூக அமைப்பும்

# தேச விடுதலையை வென்றெடுப்பதன் மூலம் பெண் விடுதலைக்கு வழிவகுப்போம்

உலக மக்களில் அரைப் பங்கினரான பெண்களுக்கெதிரான அடக்கு முறைகள் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்டவர்களான அல்லாது உலகளாவிய அளவில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆணாதிக்க சக்திகளாக கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன.

வர்க்க வேறுபாடுகளின்றி அனைத்துப் பிரிவுப் பெண்களுமே உலகில் பெண் அடக்கு முறைக்கு ஆளாகி வருகின்றனர்; பண்டைக்காலத்து அரசகுலப் பெண்கள் கூட கடுமையான கட்டுக்காவல்களுக்குட்பட்டே வாழ்ந்து வந்தார்கள்;

பெண்கள் ஆண்களின் இச்சையைத் தணிக்கும் பதுமைகளாகவும், அடிமை வேலை செய்யும் வேலைக்காரிகளாகவும், ஆண்களுக்குப் பிள்ளை பெற்றுக்கொடுக்கும் இயந்திரங்களாகவுமே கணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க சக்திகளும் மதக் கோட்பாடுகளும் பெண்ணடிமைத் தனத்தைக் காலங்காலமாக தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் நிலை நிறுத்தி வருகின்றன.

பெண்களுக்கு சொத்துரிமை மறுப்பு, உழைக்கும் பெண்களுக்கான ஊதியத்தில் வேறுபாடு. வீட்டு வேலைப்பளு. அரசியலுரிமை மறுப்பு, கல்வி உரிமை மறுப்பு. ஆண்களுக்கு கீழ்ப்படிவு போன்ற பெண் அடக்குமுறைகள் உலகளாவிய அளவில் பெண்களை தளை போட்டு இறுக்கி வைத்திருக்கின்றன.

இந் நிலையைப் பெண்ணடிமைத்தனத்தை பெண்களின் பொருளாதார சமூக சமத்துவத்துக்காகப்போராடுவதை இலக்காகக் கொண்டு 18ஆம் நூற்றாண்டுக்கு பின்னர் பல பெண்கள் அமைப்புக்கள் முகிழ்தெழுந்தன.

மேலை நாட்டவர்களான புளோரா டிரைஸ்டன், மாட்டின் ஸிருவட், கிளாரா செட்கின் போன்றவர்கள் 19-ம் நூற்றாண்டில் பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கி பெண்ணுரிமைப் போராட்ட வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றார்கள்.

1910-ம் ஆண்டு டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபர் ஹேகனில் நடைபெற்ற 2ஆவது அனைத்துலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாட்டில், ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரா செட்கின் அம்மையாரின் கருத்துக்கமைய ஒவ்வோராண்டும் மார்ச் எட்டாம் நாளை அனைத்துலக பெண்கள் நாளாகக் கொண்டாடுவதென்று முடிவெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் 1911-ம் ஆண்டிலிருந்து மார்ச் 8-ம் நாள் அனைத்துலகப் பெண்கள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது; 1911-ல் ஜேர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க், சுவிச்சர்லாந்து ஆகிய நாடுகளில் கொண்டாடப்பட்ட அனைத்துலகப் பெண்கள் நாள் 1913 ல் இருந்து ருஷ்யாவிலும் அதன்பின் படிப்படியாக உலகின் ஏனைய நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆண் - பெண் சமத்துவம், பெண்களுக்கான அரசியல் சட்டரீதியான உரிமைகள்; கல்வி, வேலைவாய்ப்பு, சம ஊதியம் போன்றவற்றை முன்வைத்து மேலை நாடுகளில் பெண்கள் நடாத்திய போராட்டத்தினால் இங்கிலாந்தில் 1918 இல் 30வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது; 10 ஆண்டுகளின் பின்னர் ஆண்களைப் போன்றே 21 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களுக்கும் அங்கு வாக்குரிமை வழங்கப்பட்டது;

இது போன்றே சிறு, சிறு சீர்திருத்தங்களை பெற்ற போதிலும் ஆண்களுக்கு நிகரான சமத்துவத்தை நிலைநாட்ட மேலைநாட்டுப் பெண்களால் முடியவில்லை. காரணம்; உழைக்கும் பாட்டாளி வர்க்கப் பெண்கள் பெருமளவில் பெண்கள் அமைப்புக்களில் சேர்ந்து களத்தில் இறங்குவதேயாகும்;

அதே நேரம் 1917 அக்ரோபர் புரட்சியின்பின் மாமேதை லெனின் அவர்கள் பெண்ணடிமைத் தனத்தை நீக்கும் வகையில் சோவியத் நாட்டில் பல சட்டங்களை உடனடியாக நடைமுறைப் படுத்தினார்; வீட்டு வேலைபளுவிலமிழ்ந்திருந்து உழைக்கும் பெண்களை அந்த இடத்திலிருந்து விடுவிக்க பெண்களின் வீட்டு வேலைகளை சமூகமயமாக்க திட்டங்கள் தீட்டினார்: குழந்தைகள், காப்பகங்கள், பொதுச்சமையற்கூடங்கள் உணவு விடுதிகள் என்பவற்றை பெருமளவில் உருவாக்கினார்; பெண்களுக்கும் ஆண்களுக்கும் நிகரான ஊதியங்கள், உழைக்கும் பெண்களுக்கு மகப்பேற்றுக் காலத்தில் ஊதியத்துடனான விடுப்பு. பெண்கள் பணியாற்றும் தொழிலகங்களில் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றையும் ஏற்படுத்தினார் இன்று உலகளாவிய ரீதியில் சோவியத் நாட்டுப் பெண்களே உரிமை பெற்றவர்களாக, ஆணாதிக்கத்திலிருந்து பெருமளவு விடுதலை பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள்; 80 வீதத்துக்கும் அதிகமான பெண்கள் சோவியத் காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியலிலும் பெரும் சக்திகளாக திகழ்கிறார்கள்:

அதேநேரம், பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் பெண்களுக்கெதிரான அடக்கு முறைகள் கொடூரமானவையாகவும், காட்டுமிராண்டித் தனமானவையாகவுமே இருந்து வருகின்றன. தமது நாட்டின் சுதந்திரத்திற்காக நடத்தப்பட்ட போராட்டங்களில் பெருமளவில் கலந்து கொண்டு பெரும் இடர்களை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டவர்கள் இந்தியப் பெண்கள். இருந்தும் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் பெண்கள் எதிர் நோக்கி வரும் இன்னல்களோ சொல்லுந்தரமன்று சிறு வயதுத் திருமணம், சீதனம், உடன்கட்டை ஏறுதல், கைம்மை பேணுகல், மறுமண மறுப்பு, கல்வியில் புறக்கணிப்பு பெண் சிசுக் கொலை போன்ற பெண்ணடக்கு முறைகளை இன்னும் இந்தியப் பெண்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழீழப் பெண்களைப் பொறுத்தவரை பெண் சிசுக் கொலைகள், சீதனக் கொலைகள், உடன் கட்டை ஏறுதல், சிறுவயதுத் திருமணம் போன்ற இந்தியப் பெண்கள் சந்திக்கும் கொடுமைகளை எதிர்நோக்காத போதிலும் சீதனம் மறுமண மறுப்பு, மதக்கோட்பாடுகள் சடங்குகள், பாலியல் வன்முறைகள் போன்ற பெண்ணடக்கு முறைகளை எதிர் கொண்டே வருகிறார்கள்,

அதுமட்டுமன்றி, சிங்கள ஏகாதிபத்தியப் படைகள் தமிழீழப் பெண்கள்மீது நடத்தும் பாலியல் வன்முறைகள் அடக்கு முறைகளுடன் அவற்றை நடத்தும் சிங்களப் படைகளுக்குத் துணையாகச் செயற்படும் துரோகப் படைகளின் இழிசெயல்கள் என தமிழீழப் பெண்கள் இரட்டிப்பு அடக்குமுறைகளை இன்று தமிழீழத்தில் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதேநேரம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்துக் கொண்ட தமிழீழப் பெண்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தாம் பெறும் வெற்றிகளினூடே பெண்ணினத்துக்கு எதிராகச் செயற்படும் சக்திகள் எதிர்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த உன்னத நிலையில் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்;

இதுவரை தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்து தமிழ் நிலத்தை ஆக்கிரமித்து ஏராளமாய் தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு வந்த சிங்களப் படைகளை இன்று தமிழீழப் பெண்கள்-விடுதலைப்புலிகள் இயக்கத்திலும் விடுதலைப் போராட்டத்திலும் தம்மை இணைத்துக் கொண்டதன்மூலம் நேரடியாகக் களத்தில் எதிர்கொண்டு தகுந்த பதிலடி கொடுத்து வருகிறார்கள்.

உலக அரங்கில் தமது ஆற்றல்களையும் தியாகங்களையும் வெளிப்படுத்தி ஆற்றல் மிக்க பெண்கள் படையாக மிளிர்ந்து வரும் விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் அனைத்துலகப் பெண்கள் நாளை மார்ச் 8-ம் நாளை மகளிர் எழுச்சி நாளாக அறிவித்துள்ளனர்.

இதுவரை பெரும்பாலான நாடுகளில் மேற்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களாலும், பெண்களை அடக்கி ஒடுக்கும் மேற்தட்டு வர்க்க சர்வாதிகார அரசியல்வாதிகளின் மனைவியராலும் சடங்கு போன்று நடாத்தப்பட்டு வந்த அனைத்துலக பெண்கள் நாளை விடுதலைப்புலிகளின் மகளிர் அணியினர் எழுச்சி நாளாக அறிவித்து கொண்டாடுவது சாலப் பொருத்தமானதாகவும் பொருளுள்ளதாகவும் அமைகின்றது.

அடக்கப்பட்ட பெண்களாக இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து புரட்சிகர சக்தியாக மாறி இன்று களத்தில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வரும் விடுதலைப் புலிகள் மகளிர் அணியில் தமிழீழப் பெண்கள் அனைவரும் ஒன்றிரண்டு உழைப்பதன் மூலமே தமிழீழ விடுதலைக்கு வழி அமைப்பதுடன் பெண்களுக்கெதிரான சகல அடக்கு முறைகளையும் உடைத்தெறிய முடியும்.

காஷ்மீர் தொடர்பாக ஐ. நாவில் வரும்

## பாகிஸ்தான் பிரேரணை தோற்கடிக்க உதவுமாறு இந்தியா கோரிக்கை

## சிம்லா உடன்பாட்டின் கீழ் காஷ்மீர்பிரச்சினைக்கு தீர்வு

- சீனா விருப்பம்

(தெகிரான்)

பெண்களின் உரிமைகள். அந்தஸ்து, கல்வி அறிவு குறைந்த, பொருளாதார வளர்ச்சியற்ற சமூகங்களை விட உயர்ந்தே காணப்படுகின்றன;

எமது சமூகத்தைப் பொறுத்தவரையில், பண்பாட்டு நியமங்களும், மூட நம்பிக்கைகளும், சமூக அமைப்பும் பெண்களின் சுதந்திரமான - சமத்துவமான வாழ்விற்கு பெரும் இடையூறுகளாகவும், தடைகற்களாகவும் இருந்து வருகின்றன. பொதுவாகவே சமூகத்தில் உள்ள பெண் பிள்ளை என்ற புறக்கணிப்பும், பிற்போக்குத்தனமான சமூகக்கட்டுப்பாடுகளும், சீதன முறையும், மறுமண முறைகளிலுள்ள இடையூறுகளும் பெண்களின் வாழ்வை ப்பெரும் இடையூறுகளுக்கும், இன்னல்களுக்கும் உள்ளாக்கியுள்ளன; அத்தோடு சட்டங்கள் கூட பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முழுமையான நீதி வழங்கக்கூடியதான நிலையில் இல்லை;

ஆனாலும், தென்னாசியாவைப் பொறுத்து தமிழீழப் பெண்களின் சமூகநிலை ஓரளவு உயர்ந்ததென்றே கூற முடியும்; இதேவேளை அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையானது தனியாக ஆணாதிக்கத்திற்கு எதிரானது மட்டுமல்ல, சிங்களப்பேரினவாதம் கட்டவிழ்த்துவிட்டுள்ள இன ஒடுக்குமுறையையும் எதிர்கொள்ளவேண்டியபெரும் நெருக்கடி நிலையில் உள்ளனர்; இதில் ஆண்களைவிட பெண்கள் பாலியல்வன் முறை போன்ற இரட்டிப்பு துன்புறுத்தல்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது;

ஆனால் இந்த இன ஒடுக்குமுறையை எதிர்கொள்ள தயாராகிவிட்ட தமிழீழப் பெண்கள், தமது சமூகநிலை அந்தஸ்தையும் உயர்த்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றே கூறமுடியும்; சுமார் ஒரு தசாப்தத்திற்குமுன்னர் தமிழர் மத்தியில் ஆயுதபோராட்டத்தில் பெண்கள் என்பது ஒரு கருத்து நிலை அம்சமாகவே இருந்து; இன்று இந்நிலை மாறி அவர்கள் சாதனையாளர்களாக மாறியுள்ளனர்; இந்தவகையில், இது தென்னாசியாவிற்கு மட்டுமல்ல முழு உலகத்திற்குமே தமிழீழப் பெண்கள் முன்மாதிரியாக உள்ளனர் என்றும் கொள்ளலாம்

இருப்பினும் சமூகத்தில் தமக்கு சமநீதி கிட்டவும், சம அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளவும் தமிழீழப்பெண்கள் இன்னமும் கணிசமான அளவில் முன்னேறவேண்டிய அவசியமுள்ளது; இதற்குத் தமிழீழப் பெண்களைப் பொறுத்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்வதன்மூலம் பெரும்பங்காற்றமுடியும் தமது கௌரவமான வாழ்வை மீட்டெடுத்திடமுடியும்

காஷ்மீர் தொடர்பாக ஐ. நாவில் வரும்

# பாகிஸ்தான் பிரேரணை தோற்கடிக்க உதவுமாறு இந்தியா கோரிக்கை

(டில்லி)

காஷ்மீர்பற்றி பாகிஸ்தான் இன்று ஐ நா மனித உரிமைகள் கமிஷனில் சமர்ப்பிக்க இருக்கும் பிரேரணையைத் தோற்கடிக்கவேண்டுமென்று உறுப்புநாடுகளிடம் இந்தியா வலியுறுத்திக்கேட்டுள்ளது.

முதுபெரும் ராஜதந்திரியும் இந்தியாவின்முன்னாள் வெளியுறவுச் செயலாளருமான ஜி என். கௌல் பாகிஸ்தானின் செயல் முன்யோசனை அற்றதும். ஆபத்துவிளைவிக்கக்கூடியதுமெனக் கூறியுள்ளார்.

ஐ. நா மனித உரிமைக் கமிஷனில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இந்தியாவும் பாகிஸ்தானில் மனித உரிமை மீறல்கள்பற்றி இத்தகைய தீர்மானமொன்றைக்கொண்டுவரமுடியுமென வும், எனினும் இந்தியா இருதரப்பு உறவுகுறித்து அமைதியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவே விரும்புகிறதெனவும் தெரிவித்தார்.

## சந்தித்து பேசினர்

குடியரசுத் தலைவர் மாளிகையில் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவைச் சந்தித்து சுமார் 45 நிமிட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். இது வழமையான சந்திப்பு எனக் குடியரசுத் தலைவர் மாளிகை வட்டார அதிகாரிகள் தெரிவித்தனர்;

## பாப்பரசர் ஈராக் விஜயம்

(பக்தாத்)

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர்சின்னப்பர் விரைவில்ஈராக்விஜயம்செய்ய இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதஐநாவின்பொருளாதாரத்தடை நடவடிக்கையை தொடர்ந்து அங்குஏற்பட்டிருக்கும்பாதிப்புகளை நேரில் கண்டறிவதே பாப்பரசரின் விஜயத்தின் நோக்கம் எனக் கூறப்படுகிறது

ஈராக்கிலுள்ள கிறிஸ்தவ மத தலைமைப்பீடம் புனித பாப்பரசருக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் வாழும் இரண்டு கோடி பேரில் சுமார் பத்து லட்சத்துக்கும் குறைவானோரேகிறிஸ்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீர்பிரச்சினைக்கு தீர்வு

- சீனா விருப்பம்

(தெகிரான்)

சிம்லா உடன்பாட்டின் கீழ் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட இந்தியாவும், பாகிஸ்தானும் முயல வேண்டுமென சீனாவும், ஈரானும் கூறியுள்ளன.

நேற்று முன்தினம் தெகிரானில் இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங்கை சந்தித்த சீன வெளியுறவு அமைச்சர் சியாங் கெய்சன் காஷ்மீர் பற்றி பாகிஸ்தான் ஐ. நா. சபையின் மனித உரிமைக் குழுவின் முன்பாக கொண்டுவரும் பிரேரணை விடயத்திற்கு சம்பந்தமில்லாதது என்றும், இந்தியாவும் பாகிஸ்தானும் இருதரப்பேச்சுமூலம் இதனைத் தீர்த்துக் கொள்ளும் என்று சீனா நம்புவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ஈரானிய அரசும் இந்தியாவும், பாகிஸ்தானும் நேரடிப் பேச்சு நடத்தி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதையே விரும்புவதாகக் கூறியுள்ளது

# விமானதளபதி மரணம் நாசவேலை எதுவுமில்லை

## தென்கொரிய அரசு அறிவிப்பு

(சியோல்)

தென் கொரியாவின் விமானப்படைத் தளபதி கொல்லப்பட்ட உலங்குவானூர்தி விபத்தில் நாசகார சதி எதுவும் இல்லை. என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட இவ் உலங்குவானூர்தி சியோலுக்கு தெற்கே கடந்த வியாழன்று விபத்தில் சிக்கியதில் விமானப்படைத் தளபதி உட்பட சிலர் உயிரிழந்தது தெரிந்ததே சீரற்ற காலநிலையினை அடுத்துஉலங்குவானூர்தி தரையிறங்க முற்பட்ட போது சிறகுகள் உடைந்ததால் இவ் விபத்து நேரிட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# மனிதஉரிமைபேணும்பண்பு நீண்டகால வழக்கமாகும்

## -இந்தியப் பிரதமர்

(டில்லி)

பல நூற்றாண்டு காலமாக இந்தியாவில் நிலவிவரும் பண்புகள், நாகரிகம், பழக்க வழக்கங்கள் மற்றும் கலாசாரம் போன்றவற்றால் இந்தியாவில் மனித உரிமைகளைப் பேணும் பண்பு இந்தியாவில் மிக அதிகமாகவே இருக்கிறது இன்றைய காலத்தில் மனித உரிமைகள் பற்றி பிரமாதமாகப் பேசும் எந்தவொரு நாட்டின் வரலாறும் இந்தியாவின்இச் சாதனைக்கு ஈடாகாது எனவும் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்;

அவர் மேலும் குறிப்பிடுகையில், நமது நாட்டின் மரபுவாதம், அரசின் மீதும், நாட்டின் மீதும் ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிகவும் முக்கியமானதாகும் எனவும் மேலும் தெரிவித்தார்;

இருதரப்பு பிரச்சினைகளை சிம்லா உடன்பாட்டின்கீழ் தீர்த்துக்கொள்ள இந்தியா உண்மையாகவே மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு பாகிஸ்தான் சாதகமாக நடக்கும் எனத் தான் நம்புவதாகவும்தெரிவித்தார்;

அத்துடன் பதற்றம் அதிகரிப்பதையும், வேறுபாட்டு உணர்வு வளர்வதையும் இந்தியா விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்;

# தெ. ஆபிரிக்கடர்பன் நகரில் துப்பாக்கிசூடு; 11பேர் பலி

(ஜோகானாஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவின் டர்பன் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் பதினொரு பேர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். கறுப்பர்கள் பெரும்பான்மையாக வாழும் இப் பகுதியில் இனந் தெரியாதோர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் சில வாகனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பதினொரு பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்னாபிரிக்காவில் அடுத்த மாதத்தில் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட பின்முதலாவதுபொதுத் தேர்தல் நடத்தப்பட இருப்பது தெரிந்ததே.

# இளவரசர் இரகசிய கடிதம் திருட்டுப் போயுள்ளது!

பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸிற்கு சொந்தமான மாளிகைக்குள் அத்து மீறி நுழைந்த திருடன் ஒருவன் அங்கிருந்து இளவரசரின் அந்தரங்க கடிதங்களை அபகரித்துச் சென்றுள்ளான்.

பரபரப்பான செய்திகளை வெளியிடும் தினசரியான நியூஸ் ஒப் த வேர்ல்ட் இச் செய்தியை பிரசுரித்திருக்கிறது.

இளவரசரின் செஸ். ஜேம்ஸ் அரண்மனையின் இளைப்பாறும் அறைக்குள் பிரவேசித்த இத்திருடன் அங்குள்ள அலுமாரிகள் மேசை லாச்சிகளைத் திறந்து இனிப்பு வகைகளை எடுத்து சாப்பிட்டுள்ளான்.

பின்னர் அங்கிருந்த இளவரசருக்கு பரம்பரையாகக் கிடைத்த உடைமைகள் சிலவற்றையும் எடுத்து தன் பாக்கெட்டுக்குள் நிரப்பிக் கொண்டு வெளியேறினான்.

1992இல் மனைவி டயானாவைப் பிரிந்த பின்னர் சார்ள்ஸ் மத்திய லண்டனில் இருக்கும் இந்த மாளிகையில் வசித்து வருவதும், இந்த வருடத்தில் அரச பாதுகாப்பை மீறிய மூன்றாவது சம்பவம் இதுஎன்பதும் குறிப்பிடத்தக்கது.

## சமாதான வழியில்

பெண் அடிமைத்தனத்திற்கு எதிராகப் பெண்களே போர்க்கொடி உயர்த்த வேண்டும். போராட வேண்டும். இந்தப் போராட்டம், ஒரு தேசிய விடுதலை அமைப்பின் பக்கபலத்துடன் முன்னெடுக்கப்படுமானால் அது வலுமிக்க சக்தியாக வெற்றியைப் பெற்றுத் தரும்.

# போருக்கான தயாரிப்புவேலையில் அரசு தீவிரமாக ஈடுபடுகிறது

இன்று, எமது தேசிய விடுதலைப் போராட்டம் புதிய சவால்களையும், புதிய நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நிற்கிறது. என்றுமில்லாதவாறு சிங்களப் பேரினவாத சக்திகள் ஓரணியில் ஒன்று திரண்டு, தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிட கங்கணம் கட்டி நிற்கின்றன. தமிழ் மக்கள் மீது தொடர்ந்து சாவையும் அழிவையும் கட்டவிழ்த்துவிட்டு, தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில், பெரியதொரு போருக்கான தயாரிப்பு வேலையையும்சிங்கள அரசுமேற்கொண்டு வருகிறது

அன்றுதொட்டு இன்றுவரை, கடந்த நாற்பது ஆண்டுகளிற்கு மேலாக சிங்களப் பேரினவாதம் இராணுவத்தீர்வுக்கே முதலுரிமை கொடுத்து வருகிறது. யுத்தத்திலும் ஆயுத அடக்குமுறையிலும் நம்பிக்கைகொண்டு செயற்பட்டு வருகிறது. சமாதானப் பாதைகளை மூடிவிட்டு, வன்முறை மார்க்கத்தையே கடைப்பிடித்து வருகிறது. நீதி கேட்டுப் போராடும் எமது மக்களிற்கு எதிராக மிகவும் கொடூரமான அநீதிகளைப் புரிந்து வருகிறது. பௌத்த தர்மத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் மகா பாதகச் செயல்களைப் புரிந்து கொண்டு தமிழரின் உரிமைப்போராட்டத்தை 'பயங்கரவாதம்' என வர்ணித்தும் வருகிறது.

# போராட்டத்தின் தார்மீக அடிப்படையே ஆன்மீக பலமாக இருந்து வருகிறது

அன்று தொட்டு இன்று வரை தமிழரின் போராட்டம் அறவழியைத் தழுவி நிற்கிறது. அகிம்சை வழியிலும் சரி, ஆயுத வடிவிலும் சரி தமிழர் வரித்துக்கொண்ட போராட்டம் தர்மத்தின் நியமத்தில் நெறிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தார்மீக அடிப்படையே எமது போராட்டத்தின் ஆன்மீகபலமாகவும் இருந்து வருகிறது.

நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாதைகளை மூடிவிடவில்லை. சமாதான வழிமூலம் எமது மக்களிற்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

# சமாதான தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்கிறோம்

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்குவரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறோம். எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்ஞைகளைக் காட்டவும் நாம் தவறவில்லை.

எமது நோக்கத்தையும், நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகம் இன்று நன்கறியும், சமாதானத்தின் பாதைக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும். உலகத்தின் சமாதான முயற்சிகளுக்கும் ஊறு விளைவிப்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும்.

# சமாதானம் நாடும் மக்களுக்காக உலகம் குரல் எழுப்ப வேண்டும்

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும், சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது, உரிமைகேட்டு, நீதிகேட்டுசமாதான வழியில் தீர்வுகேட்டுநிற்கும் எமது மக்களிற்கு சார்பாகக் குரலெழுப்ப வேண்டும்.

...கடப்பாடாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடாத்தும் பெண்கள் எழுச்சி நிகழ்ச்சிகளுக்கு எனது நல்வாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயம் 1க்கான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் கோட்ட மட்டங்களில் முதலிரு இடங்களைப் பெற்ற அணிகள் இப்போட்டியில் பங்குபற்றும்.

பங்குபற்றும் பாடசாலை அணிப் பொறுப்பாசிரியர்களின் கலந்துரையாடலொன்று கல்வி வலயம் பணிமனையில் இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

# வவுனியாவிற்கு வடக்கே 'ஜெயவீவ' ராணுவ நடவடிக்கை

### ஒரு சிப்பாய் பலி

(கொழும்பு)

வவுனியாவில்நேற்று 'ஜெயவீவ' என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாககொழும்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செமுனுகுலதுங்க தெரிவித்தார். இவ்இராணுவ நடவடிக்கையின்போது இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

வவுனியாவிலிருந்து வடக்கே மூன்றுகிலோமீற்றர் தொலைவில் உள்ள பிரப்பங்குளம் பகுதிக்கு படையினர் முன்னேறிச் சென்று தாக்குதல் நடத்தியதாகவும் தாக்குதல் நான்கு மணிநேரம் நீடித்ததாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையில் இராணுவ அதிரடிப் படையினர் பங்கு பற்றினர். விமானப் படையும் தாக்குதல் நடத்தியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரப்பன்குளம் பகுதியில் உலங்கு வானூர்தி தாக்கு

வவுனியா மாவட்டத்தின் பிரப்பன்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப் படை உலங்கு வானூர்திகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும், இத்தாக்குதலின் போது உழவு இயந்திரம் ஒன்று முற்றாக சேதமடைந்ததாகவும் இதில் சென்றவர்கள் காயமடைந்து அல்லது உயிரிழந்திருக்கலாம் எனவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

# ரணில் கொலை முயற்சி மாத்தறையில் ஒருவர் கைது

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்ய முயன்றதாக மாத்தறைப் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மாத்தறை கொட்டுவேகொட பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் பின்னர், கூரிய கத்தியொன்றுடன் ரணிலை நோக்கிச் சென்ற மேற்படி நபர் பொலிசாரினால் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

நல்லசும் ஞானரட்ன என்னும் மேற்படி நபர் விசாரணையின்பின் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# கல்வித்துறை பேராசிரியர் ராஜினாமா குறித்து மகஜர்

### பட்டப்பின் படிப்பு மாணவர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் வ. ஆறுமுகம் இராஜினாமாச் செய்ததன் காரணமாகப் பட்டப்பின் படிப்புக் கல்விச் சான்றிதழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மகஜர் ஒன்றை பட்டப்பின் படிப்புக் கல்விச் சான்றிதழ் மாணவர்கள் துணைவேந்தருக்குச் சமர்ப்பித்துள்ளனர். சுமார் 200க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்ட இந்த மகஜரை நேற்று யாழ். பல்கலைக்கழகம் கல்விக் கழகச் செயலாளர், கலைப் பீடாதிபதி ஊடாக பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குச் சமர்ப்பித்தனர்.

இரு விரிவுரையாளர்களை யாழ். பல்கலைக்கழக கல்வித் துறைக்கு நியமிப்பது தொடர்பாக துறைத் தலைவருக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாக துணைத் தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார் என்பது தெரிந்ததே.

அதேவேளை, இரு விரிவுரையாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதன் மூலம் இணக்கமான முடிவொன்றை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது.

# கோட்டக் கல்வி அலுவலகம் ஒய்வூதிய விபரம் தயாரிக்கும்

ஆசிரியர்கள் மற்றும் கல்வித்திணைக்களஊழியர்களின் ஒய்வூதியம் தொடர்பான ஆவணங்களைக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் தயாரித்து நேரடியாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பும்படி கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளதாக வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர். அதே வேளை, ஆசிரியர்களின்சேவை நீடிப்பு அனுமதியையும் இனிமேல் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு வழங்கும் எனத் தெரியவருகிறது. இந்தக் கடமையை முன்பு பிரதேசக் கல்வித் திணைக்களங்கள் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்று

விட வீதிகளில் ஓடும் வாகனங்கள் அனைத்திலும் மகளிர் தினத்தைப் பறை சாற்றும் வகையில் அமைந்த வர்ணக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன இவை அனைத்தும் ஒருமித்து அனைத்துப் பகுதியையும் எழுச்சிக் கோலமாக்கியுள்ளது.

மேலும் இன்றைய மகளிர் நாளின் முக்கிய நிகழ்வாக பொதுக்கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. (க)

## கத்தோலிக்க

...

## புலமைப்

மொழி மூலம் தோற்றியவர்களில்முதலிடம் பெற்றவர் ...

# ஹெந்தலவின் நங்கூரம் மீட்க 'ஒட்சிசன்' கொள்கலன்

ஹெந்தல கப்பலில் அறுந்து வீழ்ந்த நங்கூரத்தை கடலின் அடியில் தேடி எடுக்கும் சுழியோடிகளுக்கு உதவியாக கொழும்பிலிருந்து 'ஒட்சிசன் சிலிண்டர்கள்' எடுத்து வரப்பட உள்ளன.

ஆழ் கடலில் சேற்றினுள் அமிழ்ந்திருக்கும் நங்கூரத்தை மீட்டெடுப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 2000 கிலோ கிராம் நிறையுடைய இந்த நங்கூரம் மிகப் பெறுமதி வாய்ந்தது எனக் கூறப்பட்டது.

ஏற்கனவே இந்நங்கூரத்தை தேடும் பணி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது கிடைக்காததினால் ஹெந்தல கப்பல் வேறொரு நங்கூர இணைப்புடன் கொழும்பு திரும்பிவிட்டதுஎன்பது குறிப்பிடத்தக்கது

## கடற்படையினர்

பலியானார்கள். இருவர் படுகாயமடைந்தனர். அதனைத் தொடர்ந்து கற்கோவளம் கடற் பகுதியில் மேற்கொண்ட கடும் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

நாகர்கோயில் கடலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மாலைவரை மீட்கப்பட்டதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எனினும்

அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த இ. யோகராசா இ. இரத்தினசிங்கம் ஆகியோர் கால் கைகள் கலிபர் தாக்குதலுக்கு இலக்காகி குண்டுகள் துளைக்கப்பட்ட நிலையில் படுமோசமான நிலையில் காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

கற்கோளம் கடற் பகுதியில் நடந்த மற்றொரு தாக்குதலில் ப. பரமதாஸ், அருந்...

தான வழியில் திர்வுகேட்டுநிற்கும் எமது மக்க ளிற்கு சார்பாகக் குரலெழுப்ப வேண்டும்; இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக்

இன்று நடாத்தும் பெண்கள் எழுச்சி நிகழ்ச் சிகளுக்கு எனது நல்வாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்;


## தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப் படங்களை காலாகாலம் நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு கொடுக்கப்படும் முன்னணி நிறுவனம்

# படமாடம்

சகலவிதமான பூக்கண்ணாடி வகைகள்
சாதாரண 5m, 4m, 3m கண்ணாடி வகைகள்
48×14 றெசிங் ரேபிள் கண்ணாடிகள்
சாமிப்படங்கள், மீன் தொட்டிகள்,
இனிப்பு கண்ணாடி பெட்டிகள்,
கோல்ட் பிறேம் சட்டங்கள் (Gold Framing)
கோல்ரேப் வகைகள்

- கண்ணாடி ஒட்டும் பசை(Silicone) (சிலிக்கோன்)
- மல்ரி பொண்ட், கிறிப்ஸ்
- பூட்டு

இப்பொழுது மேற்குறிப்பிட்ட சகல பொருட்களையும் சகலவிதமான படங்களை சட்டமிட்டு பெற்றுக்கொள்ளவும்

நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# படமாடம்

அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: தைப்பொங்கல் நாளிலிருந்து சகலவிதமான கண்ணாடி வேலைகளும், படம் பிறேம் போடுவதும் நியாய விலையில் செய்து கொடுக்கப்படும்;

(சி-8795)


### கத்தோலிக்க

ஆயர் அதிவண. இராயப்பு யோசேப்பு ஆண்டகை, குருக்கள், துறவியர், பொது நிலையினர் பெருமளவில் கலந்துகொள்வர்.

நாளை ஆரம்பிக்கும் மேய்ப்புப்பணி மாநாடு தொடர்ந்து 10ஆம், 11ஆம், 12ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெற இருக்கிறது. (21)

மொழி மூலம் தோற்றிய வர்களில்முதலிடம் பெற்றவர் என்பது அறிந்ததே;

மேலும் இம்மாணவன் யப்பானிற்கு பயணம் செய்யும் காலப்பகுதிக்கு முன்னர் சிறிது காலம் தற்காலிகமாக கொழும்பில் உள்ள பாட சாலை ஒன்றில் தங்கியிருக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக தெரியவருகின்றது. (பா, க)

லங்கள் மாலைவரை மீட்கப் பட்டதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் தேடப்பட்டு வருகின்றனர்.

இக் கடற்பரப்பில் கடற் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி இடம் பெயர்ந்தவர்களான நான்கு பிள்ளைகளின் தந்தை ஜெயா என்பவர், மற்றும் தம்பி என்று அழைக்கப்படுபவரும் மற்றும் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

சுற்கோளம் கடற் பகுதியில் நடந்த மற்றொரு தாக்குதலில் ப. பரமதாஸ், அருந்தவராசா ஆகியோர் படுகாயமடைந்தனர்; நாகர்கோயில் சுற்கோவளம் கடற்பரப்பில் அரசின் அறிவிப்பையடுத்து தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் கட்டுமரங்கள், வலைகள் என்பனவும் சேதத்திற்குள்ளாகின. (யோ)

### குரல்வளைகள்

பவர்களாக இவர்களே உள்ளனர்,

பசித்துத் துடிக்கும் பிள்ளைக்கு ஒருவேளை உணவேனும் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதற்காக உடல் கூடு இயங்க மட்டுமே வலுப் பெற்றிருக்கும் அன்னை ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கும் அவலம்; ஊட்டச்சத்தின்றி கொடிய நோய்க்குப் பலியாகிப் போன தன் ஒரு குழந்தையை எண்ணிக் கவலைப் பட்டுக்கொண்டிருக்க நேரமில்லாமல் தன் மற்றைய பிள்ளைகளுக்காக ஓடி ஓடி உழைக்கும் தாயின் மனதை உருக்கும் உயிர்ப் போராட்டம், பொருளாதாரத்தடை; இப்படிப் பெண்ணின் வாழ்வைச் சிதறிச் சின்னாபின்னமாக்கும் நிகழ்வுகள் கணத்துக்குக் கணம் தொடர்கின்றன. பட்டினிச் சாவிலிருந்து தன் பிள்ளையைக் காப்பாற்றவே வழியின்றித் தவிக்கும் ஒரு தாயால் எப்படி அப் பிள்ளையின் கல்விக்காக உழைக்க முடியும்? இது ஒரு பெண், தன் குழந்தையின் இருண்ட எதிர் காலத்தை தானே உருவாக்கும் பயங்கரத் துயரம். இவை மட்டுமா எம் தமிழீழப் பெண்கள் அனுபவிக்கும் துயரங்கள்?

இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப் பட்டு உடல், உளப் பாதிப்புற்று எதிர்காலமே இருண்டு விட்டதாகத் தமக்குள் முடிவெடுத்து, தம்வாழ்வைச் சிதைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உள்ளக் குமுறல்கள். இனவாத அரசின் கெடுபிடிக்குள் நிற்காமல் ஓடித் தப்ப வெளிநாடு சென்று, இடைநடுவில் தம் வாழ்வைத் தொலைத்துவிட்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்கும் பெண்களின் சோகங்கள்...... இப்படியே தொடர்கின்றன.

எம் தாயகத்தையும் சிங்கள நாடாக்கி எம்தேசியத்தையே வேரறுக்கத் திட்டமிடும் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளால் முடமாகிப் போகும் அபாய நிலையில் இருக்கின்றனர் எம் பெண்கள். இந்த ஆபத்து உடனடியாக நீக்கப் படவேண்டும். சிங்கள அரசின் மனிதத்தன்மை அற்ற கொடுமைகள் யாவற்றையும் உலக அரங்கின் முன் அம்பலப் படுத்துவோம்.

ஒளிமங்கிக்கொண்டிருக்கும் எம் பெண்களின் விழிகளுக்கு ஒளி மீண்டும்பரவ வழிசெய்ய வேண்டும்; அதற்கு அனைத்துத் தமிழீழப் பெண்களும் ஒன்றிணைந்து சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராகக் குரல் கொடுப்போம்; குரல்வளை முற்றுமுழுவதுமாக நசுக்கப்படுமுன் ஓங்கிய குரலில் எம் வாழ்வுக்கு வழி கிடைத்தே ஆகவேண்டும் என முழக்கமிடுவோம்.

உடல் நைந்து, உளம் சிதைந்து வாழும் விதியை மாற்ற ஒருமித்த குரலில் 'வேண்டும் விடுதலை' என்று ஆழ் மனத்திலிருந்து அடிவயிற்றிலிருந்து எஞ்சிய எம் உயிர்மூச்சைத் திரட்டிக் குரல் கொடுப்போம்;


## பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் நடனசபேசன் (குகன்)

சுன்னாகம் தில்லகலட்டியைச் சேர்ந்த இவர் இன்று தனது 21-வது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள், நண்பர்கள் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(சி-8797) -நண்பர்கள்


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 7- 3- 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்.- 10152

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

41-1996, 23-6640, 28-1414, 40-2677, 41-5015, 28-1311, 27-849, 26-1089, 24-6439, 42-9625, 27-6205, 43-517, 27-4023, 26-3937, 26-3545, 24-4153, 24-6431, 24-5484, 27-7711, 28-8421, 26-3146, 41-9166, 42-488.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

41-9855, 27-6579, 41-9530, 24-2680, 27-9489, 26-2941, 26-763, 26-1285, 42-1320, 28-159, 26-2827 26-5046, 26-7525, 27-4162, 27-8160, 26-4727, 26-3068, 26-407, 24-7078, 26.7420 41-4176, 27-6704, 26-1989, 26-2589 27-2020


இப்பத்திரிகை யாழ்ப்பாணம்மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள 'சமநாதம்' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது